முகஸ்துதி

முன்னுரை

இதுவரை நாம் பதவி மோகத்தைப் பற்றி ஆராய்ந்தோம். அறிவையும் திறனையும் வைத்து மக்கள் மீது அதிகாரம் செலுத்த முற்படுவதையே நாம் பதவிமோகம் என்று குறிப்பிடுகிறோம். இப்படிச் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் மக்களிடமிருந்து தமக்குக் கிடைக்கும் மரியாதையைத் தப்பான வழிக்குப் பயன்படுத்துகிறார்கள்; மக்கள் மீது அதிகாரம் செலுத்துகிறார்கள். இவர்கள் ஒரு சாரார்.

மற்றொரு சாரார் தம் பக்தியையும் ஒழுக்கத்தையும் கருவிகளாக வைத்து மக்களிடம் கண்ணியம் பெற முற்படுகிறார்கள். இந்த மனப்பான்மைக்கு நாம் முகஸ்துதி-இச்சகம் என்று பெயரிடுகிறோம். மார்க்கத்தின் கண்ணோட்டத்தில் இச்சகத்தின் நிலை என்ன, அதன் அந்தரங்கம் என்ன, முகஸ்துதி எதை வைத்துச் செய்யப்படுகிறது, முகஸ்துதியின் படித்தரங்கள் யாவை, நன்மையை அழிக்கும் இச்சகம் எது, நன்மைக்குத் தீங்கு செய்யாத இச்சகம் எது, முகஸ்துதிக்கு முற்றுப்புள்ளி வைப்பது எப்படி என்பன போன்ற பிரச்சினைகளை இந்த நூலில் நாம் ஆராய்வோம். இதில் பெரிதும் சிறிதுமான பத்து அத்தியாயங்கள் இடம் பெற்றிருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரச்சினையை ஆராய்கிறது.

நன்மைக்கு வழிவகுப்பவன் இறைவன் ஒருவனே. அவனே மனிதனுக்கு நேர்மையைக் காட்டுகிறான்; நேரிய வழியில் நடக்கத் துணிவு கொடுக்கிறான்.

-அபூ ஹாமித் முஹம்மத் அல் கஸ்ஸாலி

1. இச்சகத்தின் இழிநிலை

முகஸ்துதியை இஸ்லாம் தடை செய்திருக்கிறது. முகஸ்துதியுள்ளவர்கள் இறைவனின் சினத்திற்கு இலக்காகிறார்கள். திருக்குர்ஆன், பெருமானார் கருத்து, நபித்தேழர் பொன் மொழிகள் அனைத்தும் இதற்கு ஆதாரம் தருகின்றன.

''வணக்கத்தை மறந்து இச்சகம் புரிகிறவர்களுக்குக் கொடிய தண்டனையுண்டு'' என்பது திருக்குர்ஆனின் குரல். மக்களுக்காக இறைவணக்கம் புரிகிறவர்களுக்கு இது ஒரு சாட்டை. அவர்கள் இறை வணக்கத்தில் ஈடுபட்டிருக்கும் போதே அதை மறந்து விடுகிறார்கள். அவர்களின் சிந்தனை மக்களின் நல்லெண்ணத்திற்குத் தாவுகிறது. எனவே அவர்களின் வணக்கம் முகஸ்துதியாக மாறுகிறது.

முகஸ்துதியற்றவர்களைத் திருக்குர்ஆன் பாராட்டுகிறது. அவர்கள் முறைப்படி இறைவணக்கம் புரிவார்கள்; வணக்கத்தில் மக்களின் நல்லெண்ணத்தை எதிர்பார்க்க மாட்டார்கள்: மக்கள் கொள்ளும் தீய கருத்தைப் பொருட்படுத்த மாட்டார்கள். அவர்கள் தம் கடமையைச் செய்து முடிப்பார்கள். தாம் செய்யும் எந்த நற்செயலையும் அவர்கள் பறையடிக்க மாட்டார்கள்.

''இறைவனுக்காகவே உங்களுக்கு நாங்கள் உணவளிக்கிறோம். உங்களிடமிருந்து பிரதி பலனையோ நன்றியையோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை!'' என்று அவர்கள் கூறுவார்கள்-இதைத் திருக்குர்ஆன் தெளிவாகக் கூறுகிறது.

''உங்களிடம் முகஸ்துதி ஏற்பட்டு விடுமோ என்று தான் நான் பெரிதும் அஞ்சுகிறேன்!'' என்பதும் பெருமானாரின் கருத்துத் தான்.

ஈஸாநபி கூறியிருக்கிறார்கள்: ''உங்களில் ஒருவன் நோன்பு பிடித்தால் அவன் தலைக்கும் தாடிக்கும் எண்ணெய் தேய்க்கட்டும். உதடுகளைத் துடைத்துக் கொள்ளட்டும். ஏனெனில் அவன் நோன்பு பிடித்திருக்கிறான் என்பதை மற்றவர்கள் தெரிந்து கொள்ளக் கூடாது!'' -முகஸ்துதியின் வித்தையை குலைப்பதற்கு ஈஸாநபி கொடுக்கும் கருத்து வரவேற்கத் தகுந்தது. நோன்பு என்பது மர்மமான வணக்கங்களில் ஒன்று. அதை மற்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. இதோ ஈஸாநபி தொடர்கிறார்கள்: ''...அவன் தர்மம் செய்வதானால் இடக்கரத்திற்குத் தெரியாமல் வலக்கரத்தால் கொடுக்கட்டும். அவன் தொழுதால் வாசற்கதவை மூடிக் கொள்ளட்டும். இறைவன் உணவுக்கும் வருமானத்துக்கும் வரையறை ஏற்படுத்தியிருப்பது போல, புகழுக்கும் பாராட்டுக்கும் வரம்பு ஏற்படுத்தியிருக்கிறான்!'' எனவே பாராட்டுக்காகச் செயலாற்றுவதும் மக்களின் நல்லெண்ணத்தை எதிர்பார்த்து நற்செயல் புரிவதும் வரவேற்கத் தகாதவை.

''நற்செயலில் அணுவளவு இச்சகம் கலந்தாலும் போதும்-இறைவன் அதனை ஏற்றுக் கொள்ள மாட்டான்!'' என்று பெருமானார் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

பெருமானாரின் கல்லறைக்கு அருகில் மஆத் பின் ஜபல் அழுது கொண்டிருந்தார்.

''ஏன் அழுது கொண்டிருக்கிறீர்கள்?'' என்று உமர் (ரலீ) அவர்கள் கேட்டார்கள்.

மஆதின் விடை கணீரென்று தெறித்தது: ''இந்தக் கல்லறைக்குரிய பெருமானாரின் பொன்மொழி ஒன்றை நினைத்தே நான் அழுது கொண்டிருக்கிறேன். 'குறைந்த அளவில் முகஸ்துதி கொள்வதும் இணை வைப்பதற்கு நிகரான ஒரு செயலாகும்!' என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்''.

ஒருநாள் பெருமானாரின் கண்களில் கண்ணீர் கசிந்து கொண்டிருந்தது. ''நாயகம் அவர்களே, தாங்கள் ஏன் அழுகிறீர்கள்?'' என்று ஷத்தாத் பின் அவ்ஸ் வினவினார். இவர் நபித் தோழர்களில் ஒருவர்.

பெருமானார் தம் வேதனைக்குக் காரணம் காட்டினார்கள். ''என்னைப் பின்பற்றும் சமுதாயத்தினர் ஒரு காலத்தில் இறைவனுக்கு இணைவைக்க ஆரம்பித்து விடுவார்களோ என்று நான் அஞ்சுகிறேன். அவர்கள் கல்லையோ சிலையையோ வணங்க மாட்டார்கள்; சூரியனுக்கோ சந்திரனுக்கோ சிரம் தாழ்த்த மாட்டார்கள். என்றாலும் அவர்கள் தம்முடைய நற்செயல்களில் மற்றவர்களின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள்!''

நற்செயல்களின் நோக்கம் இறைவனின் பக்கம் இருக்க வேண்டும். நாலுபேருடைய மதிப்பையும் மரியாதையையும் பெறுவதற்காகச் செய்யப்படும் நற்செயல்கள் முகஸ்துதியாக மாறுகின்றன. இவ்வாறு முகஸ்துதி செய்யும் எண்ணத்துடன் உருவாகும் செயலைப் பெருமானார் இணை வைப்பதற்கு நிகரான ஒரு செயல் என்று சுட்டிக் காட்டுகிறார்கள்.

''பகிரங்கமான நற்செயலை விட மர்மமான நற்செயல் சிறப்புமிக்கது'' என்னும் கருத்து இந்த உண்மையைத் தான் நமக்குக் கூறுகிறது.

நபித்தோழர் மஆதுக்குப் பெருமானார் அளித்த நல்லுரைகள் அடியில் இடம் பெறுகின்றன: ''மஆத்! உமக்கு நான் ஒரு செய்தி சொல்லப் போகிறேன். அதை நீர் பேணிக் காத்தால் பெரும் பயன் அடைவீர்; அலட்சியப் படுத்தினால் நீர் அடையும் நஷ்டம் ஈடுகட்ட முடியாதது...மனிதனின் செயலும் அவன் மனமும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அவனது செயல்களை வானவர்கள் கண்காணிக் கிறார்கள்: அவனது உள்ளம் இறைவனால் கண்காணிக்கப் படுகிறது. அவன் நற்செயல் புரியும் போது அவன் உள்ளத்தில் முகஸ்துதி தோன்றிவிட்டால் இறைவனின் வெறுப்புக்கு இலக்காகிறான்...''

சிலேடையாகக் கூறப்பட்ட இக்கருத்து நபித் தோழர் மஆதைப் பெரிதும் கவர்ந்தது. அதன்பின்னர் அவர் பெரும் பாலான நேரத்தைத் திருக்குர்ஆன் ஓதுவதில் செல விட்டாராம்!

பெருமானாரைப் போலவே அறிஞர்களும் முகஸ்துதி யை வெறுத்திருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு ஒரு சம்பவம்: யாரோ ஒருவர் சிர வணக்கம் புரிந்து கொண்டிருந்தார். சிர வணக்கத்தில் இருந்தபடியே அவர் அழுது கொண்டிருந்தது நன்றாகத் தெரிந்தது. இதை அபூ உமாமா என்னும் அறிஞர் கவனித்தார். ''உண்மையில் நீங்கள் பாராட்டுக்குரியவர் தான்-இந்த வேலையை நீங்கள் உங்கள் வீட்டில் செய்திருந்தால்!'' என்றார்.

அறிஞர் அலி (ரலி) அவர்களின் மனத் தத்துவம் அடுத்து இடம் பெறுகிறது: ''ஒரு மனிதனின் உள்ளத்தில் முகஸ்துதி இருப்பதைக் கண்டுபிடிப்பதற்கு மூன்று அறிகுறிகள் இருக்கின்றன. தனித்து விடப்பட்டால் அவன் செயலற்றுக் கிடப்பான்; நாலு பேருக்கு மத்தியில் பழகும் போது சுறுசுறுப்பாக இருப்பான்; மற்றவர்கள் நிந்திக்கும் போது வேதனைப்பட்டுச் செயலை மறக்கும் அவன் நாலு பேருடைய பாராட்டுக் கிடைக்கும் போது துரிதமாகச் செயலாற்றுவான்....''

அடுத்துவரும் உரையாடல் முகஸ்துதியின் அடிப்படை யைத் தெளிவுபடுத்துகிறது.

''இறைவழியில் நான் போரிடுகிறேன். இறைவனுக்காக வே இந்த வேலையை நான் செய்கிறேன். அதே சமயத்தில் மக்களின் பாராட்டையும் எதிர்பார்க்கிறேன்....'' என்றார் ஒரு நண்பர்.

உபாதா பின் சாமித் உடனே பதிலளித்தார். ''அப்படி யானால் உங்களுக்கு எந்த நன்மையும் கிடையாது!''

நண்பர் தம் பிரச்சினையை மூன்று தடவை திரும்பத் திரும்பச் சொன்னார். உபாதாவின் விடையில் மாறுதல் தோன்றவில்லை. ''இறைவன் இணையற்றவன். எனவே அவனுடன் மக்களை இணைப்பது தவறு''. இது உபாதாவின் இறுதி தீர்ப்பு.

''நான் ஒரு சமுதாயத்தினருடன் பழகினேன்'' என்று தமது அனுபவத்தைச் சொல்கிறார் அறிஞர் ஹஸன். அவர்களில் ஒவ்வொருவரும் தெளிந்த அறிவும் தீர்க்கமான கண்ணோட்டமும் பெற்றிருந்தனர். அவர்களின் பேச்சில் தத்துவம் இழையோடிற்று. அந்தப் பேச்சு கேட்பவருக்கும் பெரும் பயன் அளித்தது. ஆனால் அவர்கள் அதிகமாகப் பேசுவதில்லை-பிரபலம் ஏற்பட்டு விடும் என்ற அச்சத்தால்..!''

இக்ரிமா எனும் அறிஞரின் வார்த்தைகளிலிருந்து மற்றொரு தத்துவம் நமக்குக் கிடைக்கிறது. ''மனிதனின் செயலுக்கு நற்கூலியுண்டு. அவனுடைய எண்ணத்திற்கும் நற்கூலியுண்டு. ஆனால் முந்தியதைவிடப் பிந்தியதே அதிகம். ஏனெனில் தூய்மையான எண்ணத்தில் முகஸ்துதிக்கு இடமிருக்காது!''

முஹம்மது பின் முபாரக் கூறுகிறார்: ''இரவு நேரத்தில் மோன நிலையில் இருந்து பழகுங்கள். இது பகல் நேரத்தில் மோன நிலை பழகுவதைவிடச் சிறந்தது. பிந்தியது மக்களின் கவனத்தை இழுக்கிறது. முந்தியது இறைவனின் அன்பை ஈர்க்கிறது!''

-இவ்வாறு அறிஞர் பெருமக்களிடமிருந்து முகஸ்துதிக்கு எதிராக எண்ணிறந்த பொன்மொழிகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவை அனைத்தையும் இந்தச் சிறிய நூலில் இடம்பெறச் செய்வது மிகச் சிரமம்.

2. முகஸ்துதி என்றால் என்ன?

இது எல்லாவற்றுக்கும் முதலில் ஆராய்ந்து தீர்வுகாண வேண்டிய ஒரு கேள்வி. முகஸ்துதி என்பது மனிதனின் உணர்வுகளில் ஒன்று. இறைவனுக்காகச் செய்யப்படும் காரியங்களில் ஒருவன் மக்களின் பாராட்டுக்கும் நிந்தனைக்கும் இடம் கொடுத்தால் அவனை முகஸ்துதியுள்ளவன் என்று நாம் குறிப்பிடுகிறோம். இந்தக் கட்டத்தில் இறை வணக்கமும் நற்செயல்களும் கண்ணியத்தைத் தேடித் தரும் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதுவே முகஸ்துதி.

இந்த முகஸ்துதி ஒரே ஒரு செயலில் கட்டுப்பட்டதல்ல. பல்வேறு கோணங்களில்-செயல்களில் முகஸ்துதி உருவாக முடியும்.

1. சில வேளைகளில் ஒரு மனிதனின் முயற்சியும் செயல் திறனும் முகஸ்துதிக்கு வழி வகுக்கின்றன. எனவே அவன் தன்னைப் பற்றிய பிரஸ்தாபத்தை மக்களிடம் பரப்புகிறான். வாடிய முகத்தோடு, சிவந்த கண்களோடு, எண்ணெய் தேய்க்காத தலையோடு அவன் காட்சியளிக்கிறான். இவற்றின் மூலம் அவன் தான் இரவெல்லாம் கண்விழித்து வணங்கியதாகவும், குளிப்பதற்கும் எண்ணெய் தேய்ப்பதற்கும் தனக்கு நேரம் கிடைப்பதில்லை என்றும் மறுமையைப் பற்றிய ஆழமான கவலை முகத்தை வாடவைத்திருக்கிறது என்றும் மறைமுகமாகத் தெரியப் படுத்துகிறான்.

அவன் பேசும் போதும் நடக்கும் போதும் பலவீனத்தை வெளிப்படுத்துவான். இதற்குப் பொருள்: ''சாப்பிடுவதற்கு நேரம் ஏது? அப்படிச் சாப்பிட்டாலும் வணக்கத்திற்குத் துணை செய்யும் அளவுக்கே நான் சாப்பிடுகிறேன். எனவே என்னிடம் பலவீனம் குடிகொண்டிருக்கிறது!''

அவன் எண்ணுவது சரியா தப்பா என்று நாம் ஆராய வேண்டியதில்லை. இப்படி ஒரு மனிதன் நடக்கும் போது, மற்றவர்களின் மனத்தில் நல்லதொரு எண்ணம் தோன்று கிறது. எண்ணெய் படாமல் காய்ந்து கிடக்கும் முடியைப் பார்க்கும் போது அவர்களின் மனத்தில் அவனுடைய பற்றற்ற வாழ்வு பிரதி பலிக்கிறது. மகிழ்ச்சியற்ற அவனுடைய முகத்தைப் பார்க்கும் போது அவர்களின் மனத்தில் ''மறுமை பற்றிய கவலையே இதற்குக் காரணம்!'' என்றும் எண்ணத் தோன்றுகிறது.

மக்கள் அவனுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக் கிறார்கள். அவனது செயல்கள் அனைத்தையும் அவர்கள் பக்தியோடு பார்க்கிறார்கள். அவனுடைய் சொற்கள் ஒவ்வொன்றையும் ஊன்றிக் கவனிக்கிறார்கள். பஞ்சடைந்த கண்களுடன், காய்ந்து போன உதடுகளுடன், உயிரற்ற வார்த்தைகளை அவன் பேசும் போது அவர்கள் என்ன நினைக்கிறார்கள்?

அவர்கள் இப்படி எண்ணுகிறார்கள்: ''அவரால் பேசு வதற்கும் முடியவில்லை. ஓய்வில்லாமல் நோன்பு பிடிக்கிறார். எனவே தான் அவரது கண்கள் பஞ்சடைந்து கிடக்கின்றன.....''

எனவே தான் ஈஸா நபியவர்கள் இப்படிக் கூறினார்கள்: ''உங்களில் யாரேனும் நோன்பு பிடித்தால் அவன் தலைக்கு எண்ணெய் தேய்க்கட்டும்...''

2. முதற் பிரிவினர் இறைவணக்கத்தை வைத்து மக்களைக் கவர்கிறார்கள். இன்னும் சிலர் வேறொரு முறையைக் கையாள்கிறார்கள். இவர்கள் மீசையைச் சிரைத்துக் கொள்கிறார்கள்; நடந்து செல்லும் போது தலையைத் தாழ்த்திக் கொள்கிறார்கள். சிரவணக்கத்தின் சின்னத்தை நெற்றியில் பலவந்தமாக ஏற்படுத்திக் கொள்கிறார்கள்; கைலியை உயர்த்தி அணிந்து கொள்கிறார் கள். மிகச் சாதாரண துணிகளை அணிந்து கொள்கிறார்கள். இந்த வழியில் அவர்கள் தாம் பெருமானாரை அப்படியே பின் பற்றுவதாகப் பறையடிக்கிறார்கள். இவர்கள் நீண்ட தலைப்பாகை அணிகிறார்கள்-மற்றவர்களிடம் இருந்து நம்மைப் பிரித்துக் காட்டுவதற்காக! இவர்கள் அலட்சிய பாவத்துடன் நடந்து கொள்கிறார்கள்-தம்மிடம் முழு ஞானமுண்டு என்று காட்டுவதற்காக!

இது இப்படியிருக்க பாமரர்களிடம் மற்றொரு குணத்தை நாம் பார்க்கிறோம். அதையும் முகஸ்துதியில் தான் சேர்க்க வேண்டும். விலையுயர்ந்த துணிகளை அவர்கள் அணி கிறார்கள். தரம் உயர்ந்த பொருள்களை உபயோகிக்கிறார் கள். நாலு பேருடைய பார்வையில் படும் போது தான் அவர்கள் அப்படி நடக்கிறார்கள். தனிமையில் அவர்கள் முற்றிலும் மாறுபட்ட விதத்தில் செயலாற்றுகிறார்கள். அழுக்குத் துணியுடன் காய்ந்த தலையுடன் வீட்டில் இருக்கும் இவர்கள் வெளியில் புறப்படும் போது சுத்தமான துணியை அணிகிறார்கள்; தலைக்கு எண்ணெய் தேய்த்துக் கொள் கிறார்கள். இந்தத் துறையில் ஆண்களைவிடப் பெண்களே பெரிதும் முன்னேறியிருக்கிறார்கள்.

சுத்தமாக உடையணிவதும், தூய முறையில் காட்சி யளிப்பதும் முக்கியம் தான். இஸ்லாம் தூய்மைக்குப் போதிய கண்ணியம் கொடுத்திருக்கிறது. நான் மறுக்கவில்லை. ஆனால் அந்தத் தூய்மையை நாலு பேர் இருக்கும் போது தான்

கையாள வேண்டும் என்பது என்ன நியாயம்? தூய்மையாக இருக்க விரும்புகிறவர்கள் தனிமையில் அப்படியிருக்கக் கூடாது என்று சட்டம் ஏதும் இருக்கிறதா, என்ன?

3. மனிதனுடைய நாவு சக்தி வாய்ந்தது, புனிதமான பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அது படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதே நாவு சில வேளைகளில் முகஸ்துதிக்கு வழி வகுக்கிறது. இந்தக் குறையை நாம் பேச்சாளர்களிடம் காணலாம்.

அவர்கள் பேசும் போது தம் அறிவுக்கும் சிந்தனைக்கும் விளம்பரம் கொடுக்கிறார்கள். இறை கட்டளையை எடுத்துச் சொல்லும் போது உணர்ச்சி வசப்பட்டது போல் ஆவேசமாக பேசுகிறார்கள். முன்னோர் அனுபவித்த துன்பங்களை விளக்கும் போது பலவந்தமாகக் கண்ணீரை வரவழைத்துக் கொள்கிறார்கள். இதன் மூலம் அவர்கள், முன்னோரின் வாழ்க்கை தம் மனத்தைப் பெரிதும் கவர்ந்து விட்டது என்று காட்ட முற்படுகிறார்கள்.

தீய செயல்களுக்கும் மார்க்க வரம்புக்கு அப்பாற்பட்ட கொடிய செயல்களுக்கும் விளக்கம் கொடுக்கும் போது அவர்கள் பொங்கிவரும் சினத்துடன் பேசுகிறார்கள். அதாவது, மக்கள் முரண் வழியில் சென்று கொண்டிருப்பது அவர்களின் மனத்தில் அவ்வளவு சினத்தை ஏற்படுத்து கிறதாம்!

முன்னோரின் வரலாறுகளைச் சொல்லும் போது அவர்கள் செய்த சாதாரணத் தவறுகளை எல்லாம் இவர்கள் பன்மடங்காகப் பெருக்கிக் காட்டுகிறார்கள். இதன் மூலம் அவர்கள் தம் அறிவை உயர்த்திக் காட்டுகிறார்கள். பேச்சுக் கிடையில் குர்ஆனின் வசனங்களைச் சொல்ல நேரும் போது நடுங்கும் குரலுடன் பேசுகிறார்கள்; திருமறையின்

வசனங்கள் அவர்களின் மனத்தில் அப்படியொரு அதிர்ச்சி யை ஏற்படுத்தி விடுகின்றனவாம்.

பிரச்சாரத்தில் உருப்பெறும் முகஸ்துதி விரிவானது. திறமையுள்ள பேச்சாளர்கள் எத்தனையோ விதங்களில் தம்மைப் பற்றிய ஆழமான எண்ணத்தை மக்களின் மனத்தில் பதித்து விடுகிறார்கள். அந்த எண்ணம் அவர்களை குறிப்பிட்ட திசையில் உந்தித் தள்ளிச் செயல்பட வைக்கிறது. பேச்சாளர்கள் தம் திறமையை முறைப்படி உபயோகிக்கத் தவறும் போது எத்தனையோ விபரீதங்கள் ஏற்படுகின்றன.

எனவே உங்கள் நாவன்மையை ஆக்க வேலைக்குப் பயன்படுத்துங்கள். திருக்குர்ஆனின் கருத்துக்களையும் பெருமானாரின் பொன்மொழிகளையும் மக்களின் மனத்தில் பதியுங்கள். தெளிவான இஸ்லாமிய சட்டங்களை அவர்களின் உள்ளத்தில் செதுக்குங்கள். நல்ல லட்சியத்தின் முத்திரையைப் பதியுங்கள். ஆனால் தயவு செய்து உங்கள் முத்திரையைப் பதித்து விடாதீர்கள். உங்கள் திறமை, அறிவு, அந்தஸ்து, சிந்தனை அனைத்துக்கும் இறைவனிடமிருந்து பாராட்டை எதிர்பாருங்கள். கடமையைச் செய்யுங்கள்; கண்ணியத்தைப் பொருட்படுத்தாதீர்கள். உண்மையைச் சொல்லுங்கள்; முன்னோர் நடந்த வழியில் செல்லுங்கள்.

4. தாம் சிறந்த இறைபக்தர் என்பதை வெளியில் காட்டிச் சிலர் முகஸ்துதி செய்கிறார்கள் என்று குறிப் பிட்டேன். வேறு சிலர் இறைவணக்கத்தில் ஈடுபட்டிருக்கும் போதே முகஸ்துதியில் தலையிட்டு விடுகிறார்கள். தாம் தொழுவதை யாரோ சிலர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதால் இவர்கள் தொழுகையின் நேரத்தை அதிகப்படுத்து கிறார்கள். ஐந்து வினாடி நேரம் சிரவணக்கம் புரியும் இவர்கள் பதினைந்து வினாடி நேரத்தைச் செலவிடுகிறார்கள்.

பள்ளிவாசலையே மித்துப் பார்க்காத சிலர், முக்கியமான சில 'புள்ளிகள்' கண்காணித்துக் கொண்டிருக்கின்றனர் என்ற காரணத்தால் ஆர்வத்தோடு பள்ளிக்குள் புகுந்து குனிந்து நிமிர்கிறார்கள். வளைந்து நெளிகிறார்கள்! எந்தக் கோணத்திலிருந்தும் இந்தச் செயலுக்கு வணக்கம் என்று பெயர் கொடுக்க முடியாது. ஏனெனில் வணக்கம் என்பது இறைவனுக்காக மட்டுமே செய்யப்படும் ஒன்று!

இவர்களின் செயல்களை நாம் கொஞ்சம் ஆழ்ந்து கவனித்தால் ஓர் உண்மையைத் தெரிந்து கொள்ளலாம்; இவர்களின் செயல்கள் அத்தனையும் மற்றவர்களின் கவனத்தால் உருவாகின்றன. யாருமில்லாத தனித்த சூழலில் இவர்களின் செயல்கள் முழுக்க முழுக்க மாறுபடுகின்றன.

எனவே இவர்கள் தனிமையில் செய்யும் ஒரு காரியம் நாலுபேரைக் கண்டதும் வேறுவிதமாக மாறுகிறது. நாலு பேருக்கு மத்தியில் இவர்கள் செய்யும் காரியம் தனிமையை உணர்ந்ததும் புதுவிதமாக மாறுகிறது. ஆர்வத்தோடு இறைவணக்கம் புரியும் இவர்கள், கண்காணிப்பவர் எவரு மில்லை என்பதையுணர்ந்ததும், உயிரற்ற ஒரு செயலாக அதை மாற்றி விடுகிறார்கள். சற்று முன் காணப்பட்ட ஆர்வம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகிறது. இதே போன்று வேண்டா வெறுப்புடன் உருவாக்கப்படும் இறைவணக்கம், நாலு பேர் வந்ததும் புதிய ஆர்வத்துக்கும் மகிழ்ச்சிக்கும் நிலைக்களனாக அமைகிறது.

இத்தகையவர்கள் மற்றவர்களுக்காகவே நன்மை செய்கிறார்கள்; தீமையைத் தவிர்க்கிறார்கள். எனவே இவர்கள் தனித்து விடப்பட்டால் நன்மையை விட்டுவிடக் கூடும்; தீமையைச் செய்யக்கூடும். கண்காணிப்பதற்கு யாருமில்லை யல்லவா? ஆனால் இறைவன் மனிதனுடைய செயல்கள்

அனைத்தையும் கண்காணித்து கொண்டிருக்கிறான் என்பதை இவர்கள் என்றைக்கும் மறந்துவிடக் கூடாது. அவன் அனைத்தும் தெரிந்தவன்; அவன் பார்வைக்கு எதுவும் தப்ப முடியாது.

உண்மையை பார்க்கும் போது நமக்கு ஆச்சரியம் ஏற்படுகிறது. நாலு பேர் கண்காணிக்கிறார்கள் என்ற காரணத்தால் எத்தனையோ பேர் தாம் செய்யத் தீர்மானித் திருந்த தவற்றை விட்டிருக்கிறார்கள். கவனிப்பவர் எவரு மில்லை என்ற காரணத்தால் எத்தனையோ பேர் புனிதமான பல காரியங்களை விட்டிருக்கிறார்கள்! நன்கு சிந்தித்துப் பாருங்கள்: இவை அத்தனைக்கும் முகஸ்துதியே காரணம் எனும் உண்மை தெரியும்.

அவசரமாகப் போய்க் கொண்டிருக்கும் ஒருவன், சிலர் கவனிப்பதை உணர்ந்ததும்,தன் வேகத்தைக் குறைத்துக் கொள்கிறான். அவர்கள் அவனை அவசரக்காரன் என்று எண்ணி விடுவார்களாம். சுருங்கச் சொன்னால் முகஸ்துதிக்காரர்களின் செயல் அவர்களின் மனத்தைக் காட்டாது. அது நேரத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் தக்கவாறு மாறிக் கொண்டிருக்கும். எனவே அவர்களை-அவர்களின் செயல்களை யாரும் எளிதில் நம்ப முடியாது.

5. இன்னும் சிலர் தம் நண்பர்களையும் தம்மைப் பேட்டி காணும் அன்பர்களையும் தாம் பழகும் வட்டாரத்தை யும் வைத்து முகஸ்துதி செய்கிறார்கள். இது மிகச் சாதாரண மாக எங்கும் காணப்படும் ஒரு குணம். ஓர் அறிஞர், அல்லது ஒரு பக்தர், அல்லது ஓர் அரசர் வந்து அவர்களைச் சந்தித்து இரண்டு வார்த்தை பேசி விட்டால் போதும். அனைத்தையும் மறந்து மகிழ்ந்து போவார்கள்.

பெரிய மனிதர்களைப் பற்றியே இவர்கள் அதிகமாகப் பேசுகிறார்கள். ஏனெனில் தமக்கும் பெரிய மனிதர்களுக்கு மிடையில் நெருங்கிய தொடர்புண்டு என்பதைக் காட்டிக் கொள்ள விரும்புகிறார்கள்.

''உனக்கென்ன தெரியும்?'' என்று அவர்கள் கேட்பார்கள். ''நீ எந்த அறிஞரைச் சந்தித்திருக்கிறாய்? நான் எத்தனையோ அறிஞர்களைக் கண்டு பேசியிருக்கிறேன்: அவர்களுடன் அலைந்து திரிந்திருக்கிறேன்.....''

-முகஸ்துதி என்றால் என்ன, எதை வைத்து முகஸ்துதி செய்யப்படுகிறது என்பவற்றைப் பார்த்து விட்டோம். இப்போது நாம் சிந்தனையை வேறொரு கோணத்திற்குத் திருப்புவோம்.

3. படித்தரங்கள்

முந்திய அத்தியாயத்தில் நாம் முகஸ்துதி என்றால் என்ன, எதை வைத்து முகஸ்துதி செய்யப்படுகிறது. அதன் குறிக்கோள் என்ன என்பவற்றை ஆராய்ந்தோம். நற்செயலை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அதன் மூலம் பெருமையடைய முயல்வது தான் முகஸ்துதி என்று குறிப்பிட்டேன். இந்தக் கோணத்திலிருந்து பார்க்கும் போது முகஸ்துதி கொண்டவர்களை நான்கு பிரிவினராகப் பிரிக்கலாம். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு படித்தரத்தில் இருக்கிறார்கள்.

முதற் படித்தரம்: இவர்கள் நற்காரியம் செய்யும் போது இறைவனைப் பற்றிய எண்ணம் அறவே இருக்காது. இவர்கள் மற்றவர்களைப் பார்த்ததும் நற்காரியம் செய்வார்கள்: யாருமில்லாத இடத்தில் அதை விட்டு விடுவார்கள். நாலுபேருடைய கண்ணியத்தைச் சம்பாதிப்பதற்காக இவர்கள் அசுத்தமான நிலையிலும் இறைவணக்கம் புரிவார்கள். மற்றவர்களின் சிந்தனையைத் தவிர்ப்பதற்காகத் தர்மம் செய்கிறவர்களும் இந்தப் படித்தரத்தைச் சேர்ந்தவர்களே. முகஸ்துதியின் படித்தரங்களிலேயே இது மிகக் கொடியது.

இரண்டாம் படித்தரம் : இவர்கள் நற்செயல் புரியும் போது இறைவனைப் பற்றிய எண்ணத்திற்கும் சிறிது இடமளிப்பார்கள். ஆனால் இந்த எண்ணத்தைவிட முகஸ்துதி அவர்களுக்கு அதிகமாக இருக்கும். எனவே இவர்கள் முதற் பிரிவினரைப் போல், தனிமையில் நற்காரியம்

செய்ய மாட்டார்கள். அந்த நல்லெண்ணம் பலவீனமானது. செயலை உருவாக்கும் திறன் அதனிடம் கிடையாது.

மூன்றாம் படித்தரம் : இவர்கள் ஏககாலத்தில் இறைவனின் அன்பையும் மக்களின் பாராட்டையும் எதிர்பார்ப்பார்கள். இந்த இரண்டு எண்ணங்களும் சம அளவில் இருக்கும். இந்த இரண்டில் ஒன்று மறைந்துவிட்டால் அவர்களால் நற்காரியம் செய்ய முடியாது. இரண்டும் சேரும் போது செயல் உருவாகும்-இவர்களைப் பற்றிய முழு விவரம் 'நல்லெண்ணம்' எனும் நூலில் அடங்கியிருக்கிறது.

நான்காம்படித்தரம்: இவர்கள் மக்களின் மதிப்புக்காகப் பெரிதும் முயற்சி செய்வார்கள். இறையெண்ணத்தை விட இது வலிமை பெற்றிருக்கும். என்றாலும் தனித்து விடப்பட்டால் அது அவர்களின் நற்செயலுக்குப் பாதகம் ஏற்படுத்தாது. நாலு பேருக்கு மத்தியில் நடந்து கொள்வது போல் அவர்கள் தனிமையிலும் நட்ந்து கொள்வார்கள்.

இப்போது உங்கள் கவனத்தை இறைவணக்கத்திற்குக் கொண்டு வாருங்கள். இறை வணக்கமும் புனிதச் செயலும் சிலரால் முகஸ்துதிக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்று நான் குறிப்பிட்டேனல்லவா? இங்கு இதைக் கொஞ்சம் விரிவாக ஆராய்வோம்.

1. சில வேளைகளில் இறை நம்பிக்கை முகஸ்துதிக்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்த முகஸ்துதி நம்முடைய காலத்தில் அதிகமாக இல்லை. பெருமானாரின் காலத்தில் இது அதிகமாகக் காணப்பட்டது. தாம் இறைவனை நம்புவதாகவும் இறைமார்க்கத்தை ஏற்றுக் கொள்வதாகவும் சிலர் கூறினார்கள். ஆனால் அது உண்மைக்கு முற்றிலும் மாறுபட்டது. இவர்கள் 'முனாபிகுகள்' என்று அழைக்கப்

பட்டனர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறவர்கள் என்பது பொருள். இத்தகையவர்களை இன்றைக்கு அதிகமாகக் காணமுடியாது. எனவே இதைப் பற்றி நாம் இப்போது ஆராய வேண்டியதில்லை.

2. இவர்கள் கட்டாயக் கடமைகளை வைத்து முகஸ்துதி செய்கிறார்கள். தொழுகை, நோன்பு முதலியவை இவர்களால் இந்த வழியில் பயன்படுத்தப்படுகின்றன. இவர்கள் மக்களின் நன் மதிப்புக்காகத் தொழுவார்கள்; அவர்களின் நிந்தனையைத் தவிர்ப்பதற்காக 'ஸகாத்' கொடுப்பார்கள். அவர்களின் பொருள் உங்களிடமிருந்தால் உங்களை அந்தப் பணத்திற்கு 'ஸகாத்' கொடுக்கச் சொல்லுவார்கள்-உங்கள் மதிப்பைப் பெறுவதற்காக! அந்தப் பணம் அவர்களிடம் ஒப்படைக்கப்படும் போது 'ஸகாத்'தை வெறுப்பார்கள்.

நாலு பேரின் தப்பான கருத்தை வரவேற்க விரும்பாதால் இவர்கள் வெள்ளிக் கிழமையன்று தொழுகையில் கலந்து கொள்வார்கள். நண்பர்களுக்கு மத்தியில் தம் குட்டு உடைபடக் கூடாது என்பதற்காக நோன்பு திறப்பார்கள். நோன்பு பிடிக்காமல் நோன்பு திறக்கும் அற்புதத்தை இவர்களிடம் நீங்கள் தாராளமாகக் காணலாம்! இதே போன்று அவர்கள் நோன்பை முழுமைப்படுத்தும் எண்ணமில்லாமல் நோன்பு பிடிப்பார்கள்.

இவர்கள் கல்லையோ முள்ளையோ வணங்க மாட்டார்கள். ஏனெனில் நேர்வழியில் இவர்களுக்குப் பூரண நம்பிக்கையுண்டு. ஆனால் மக்களின் கண்ணோட்டத்திற்காக அவர்கள் எதை எதையோ செய்கிறார்கள்; எதை எதையோ விடுகிறார்கள். இவை அனைத்தும் முகஸ்துதியின் நச்சுக் கனிகள்.

3. இவர்கள் கொஞ்சம் விசித்திரமானவர்கள். இவர்கள் இறை நம்பிக்கையையோ கட்டாயக் கடமைகளையோ முகஸ்துதிக்குப் பயன் படுத்துவதில்லை. கட்டாயமில்லாத இதர வணக்கங்களை இவர்கள் தம் நோக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பிரேதப் பிரார்த்தனையில் இவர்கள் முறைப்படி கலந்து கொள்கிறார்கள். இரவெல்லாம் நின்று இறைவணக்கம் புரிகிறார்கள்; வியாழனன்றும் திங்களன்றும் நோன்பு பிடிக்கிறார்கள்; முஹர்ரம் பத்தாம் நாள் மட்டுமன்றி, ஒன்பதாம் நாளும் நோன்பு பிடிக்கிறார்கள். ஆனால், இந்த நற்செயல்களைப் பார்ப்பதற்கு அங்கு யாரேனும் இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களால் செயலாற்ற முடியும். தனித்து விடப்பட்டால் அவர்கள் எதையும் செய்ய மாட்டார்கள்.

இந்த செயல்களில் சில, அச்சத்தால் ஏற்படுகின்றன. தம்மைப் பார்க்கும் மற்றவர்கள் இழிவாக மதிக்க ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது என்னும் அச்சம்!

இவர்கள் மக்களின் நிந்தனைக்கு ஏன் அஞ்ச வேண்டும் என்று நமக்குத் தெரியவில்லை. இறைவனின் நிந்தனையையும் வெறுப்பையும் இவர்கள் வரவேற்கிறார்களா? தண்டனை பெறும் துணிவுள்ளவர்கள் தாராளமாகத் தவறு செய்யட்டும். நாம் குறுக்கே நிற்கவில்லை.

இப்படி முகஸ்துதி செய்கிறவர்களை நீங்கள் கேட்டால் அவர்கள் என்ன சொல்வார்கள் தெரியுமா? இதோ அவர்கள் சொல்கிறார்கள்: ''நான் தவறு செய்யவில்லை. என்னுடைய செயல் எந்த விதத்திலும் குற்றமாகாது. என்னுடைய இறை வணக்கம் முழுமையற்றது என்று மக்கள் கருதும் போது அவர்கள் என்னைப் பற்றி அவதூறு பேசுகிறார்கள். இதன் மூலம் அவர்கள் தவறு செய்கிறார்கள். அவர்களை அந்தத் தவற்றிலிருந்து காப்பதற்காகவே நான் இப்படி நடக்கிறேன்....''

இவர்களின் அடிமனத்தில் இருப்பது என்ன என்று நமக்குத் தெரியாது. என்றாலும் இவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறார்கள். மற்றவர்கள் செய்யும் குற்றங்களுக்கு இவர்களா பொறுப்பாளி? மற்றவர்களின் குற்றங்களைத் தடுப்பதற்கு இது தானா வழி?

பொதுவாகப் பார்க்கும் போது, தன்னைப் பற்றிய ஆழமான முத்திரையை மற்றவர்களின் மனத்தில் பதிப்பதற்குத் தான் ஒரு மனிதன் முகஸ்துதி செய்கிறான் என்பதை நாம் அறிகிறோம். ஆனால் எல்லா இடங்களிலும் முகஸ்துதிக்கு இது காரணமாக இருப்பதில்லை.

சில வேளைகளில் பொருளுக்காக-பதவிக்காக முகஸ்துதி செய்யப்படுகிறது. இவர்கள் முதலில் தம்மிடம் யோக்கியமும் பொறுப்புணர்வும் இருக்கின்றன என்பதை வெளியில் காட்டுகிறார்கள். அப்புறம் தாம் எந்தக் குற்றமும் செய்ததில்லை என்றும் செய்யப்போவதில்லை என்றும், மக்களை நம்ப வைக்கிறார்கள். இதற்கு ஆதாரமாகத் தம்முடைய செல்வத்தையும் அறிவையும் காட்டுகிறார்கள்.

பாவம்! பாமரர்களுக்கு என்ன தெரியும்? அவர்கள் அனைத்தையும் அப்படியே நம்பி விடுகிறார்கள். எனவே முகஸ்துதிக்காரர்களிடம் பல்வேறு பொருளியல் பொறுப்புகளும் பதவிக் கண்காணிப்பும் ஒப்படைக்கப் படுகின்றன. அப்புறம் அவர்கள் தம்முடைய உண்மை உருவத்தை வெளியில் காட்டுகிறார்கள்.

முகஸ்துதியின் பிரிவுகளிலேயே இது மிகக் கொடியது. அவர்கள் சிறிது நாட்களுக்குத் தம்முடைய பொறுப்பு

ணர்வை நிரூபித்துக் காட்டிய பிறகு உள்ளுக்குள்ளே தம் திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள். இதனால் பதவியில் ஊழல் தோன்றுகிறது; ஏழைகளின் அமானிதத்தில் மோசம் நிகழ்கிறது; நிர்வாகத்தில் அட்டூழியம் உருவாகிறது. சிறுவர்களின் கவனத்தையும் பெண்களின் கவனத்தையும் பெறுவதற்காக இவர்கள் நல்வழிக்கு ஆர்வம் காட்டுவார்கள். சிறுவர்கள் தானே எதிர்கால மன்னர்கள்? நல்ல இடத்தில் மணம் முடிக்கும் எண்ணத்துடன் பள்ளியைத் தேய்ப்பவர் களும் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களே!- முகஸ்துதி செய்கிறவர்களின் செயல்கள் அனைத்தையும் எழுதி முடிப்பது அசாத்தியம்,அவற்றிற்கென்று தனிப்பட்ட தொரு நூலே எழுதவேண்டியிருக்கும். எனவே பிரச்சினையை உங்கள் தீர்ப்புக்கு விட்டு விட்டேன். முகஸ்துதியின் செயல்களை ஆராய்ந்து நீங்களே ஒரு முடிவுக்கு வாருங்கள்.

4.வியாதிக்கு மருந்து

எந்த வியாதிக்கும் மருந்து உண்டு. மருந்தின்றி எந்த வியாதியும் நீங்குவதில்லை. எனவே முகஸ்துதி எனும் நோய் கொண்டவர்கள் அதற்கு மருந்து சாப்பிட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

முகஸ்துதி மிகக் கொடிய குணம் என்பதும், அது நற்செயல்களின் ஜீவனையே அழித்து விடுகிறது என்பதும் உங்களுக்குத் தெரிந்த விவரங்கள். இந்த நோய், தெரிந்தோ தெரியாமலோ பலரிடம் குடிகொண்டிருக்கிறது என்பதை யும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

இந்த வியாதியை பயிற்சி எனும் மருந்து விரைவாக அழிக்கும் சக்தியுள்ளது. பயிற்சியின் எல்லை விரிவானது அதன் உதவியால் யாரையும் திருத்தி விடலாம். இந்தப் பயிற்சி அப்படி ஒன்றும் சாதாரணமானதல்ல. இது கடினமான பயிற்சி. ஒவ்வொருவரும் இந்தப் பயிற்சியை மேற்கொண்டே யாகவேண்டும் என்ற நிலை இப்போது இருக்கிறது.

மனிதன் சிறப்புள்ளவன்; அவன் ஆற்றல் அதிசயிக்கத் தக்கது, அவனது சிந்தனை அகிலத்தையே அளந்து பார்த்து ஆண்டவனைக் காணும் பேறு பெற்றது. ஆனால் அவன் முழுக்க முழுக்கச் சிறப்புள்ளவனல்லன். அவனிடம் எத்தனையோ இழிகுணங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு முன்னால் அவனது ஆற்றல் எடுபடுவதில்லை. அவனுடைய குழப்ப மனப்பான்மை அவனது சிறப்புக்குக் குழிதோண்டு கிறது. அவனுடைய மனவியாதி அவனது சிந்தனைக்குக் கெட்ட பெயர் தேடுகிறது.

உடல் வியாதியை விட மன வியாதி கொடியது என்று உங்களுக்குத் தெரியும். முன்னது உடலை மட்டும் பாதிக்கும்; பின்னது உடலையும் உள்ளத்தையும் பாதிக்கும். எனவே உடல் வியாதியை விடத் துரிதமாக மனவியாதியை அழிக்க வேண்டும். இது தான் புத்திசாலிகள் செய்ய வேண்டிய முதல் வேலை.

முகஸ்துதி இளமையிலிருந்து மனிதனின் உள்ளத்தில் வேரூன்றி வந்திருக்கிறது. மனிதன் கள்ளம் கபடமில்லாத வெள்ளை மனத்தோடு தான் பிறக்கிறான். அப்போது அவனுடைய பகுத்தறிவு பிஞ்சு போன்றது; அதில் திறமை கிடையாது. அவன் மனம் கண்ணாடி போன்றது! அது எதிரிலிருப்பதைப் பிரதிபலித்துக் காட்டும். எதிரிலிருப்பது நல்லதா கெட்டதா என்று அதற்குத் தெரியாது. அவன் பார்ப்பது, கேட்பது, சுவைப்பது அனைத்தும் அவனுக்கே தெரியாமல் அவனுடைய அடி மூளையில் பதிவு செய்யப் படுகின்றன. தன்னுடைய சின்னஞ்சிறிய கண்களால் அவன் தன்னைச் சுற்றிலும் பார்க்கிறான். தன் சகோதரன், உற்றார், உறவினர், பெற்றோர் அனைவரும் தம் மதிப்பை உயர்த்திக் காட்டுவதையும் முகஸ்துதி செய்வதையும் அவன் கவனிக் கிறான். இந்தக் கவனம் மூளையால் பதிவு செய்யப்பட்டுக் குணத்தை உருவாக்கிறது.

சிறுவர் சிறுமியரை வளர்ப்பது பெரியதொரு கலை.அதில் தேர்ந்த பெற்றோர்களே எதிர்காலத்தில் தம் குமாரர்களை-குமாரிகளைப் பார்த்துப் பெருமைப்பட முடியும். அமைதி, அடக்கம், பண்பு, ஒழுக்கம் முதலிய சிறப்புக் குணங்கள் அமைந்த சூழலில் சிறுவர்கள்-சிறுமியர்கள் வளர்க்கப்பட்டிருந்தால் பேச்சேயில்லை. அவர்கள் என்றைக்கும் பத்தரை மாற்றுத் தங்கக் கட்டிகளாகவே இருப்பார்கள். அவர்கள் பகைவனை ஆதரிப்பார்கள்;

எட்டி உதைத்தவனைக் கட்டியணைப்பார்கள்; தலையைத் தட்டியவனைத் தடவிக் கொடுப்பார்கள்.

ஆனால் பெற்றோர் இதுவிஷயத்தில் போதிய அளவு அக்கறையில்லாமல் இருக்கிறார்கள். சிறுவர் சிறுமியரைத் தாமாக வளரட்டும் என்று விட்டுவிடுகிறார்கள். இதனால் சமுதாயத்தில் தோன்றும் ஊழல்கள் எல்லைகட்ட முடியாதவை. குழந்தைகளைப் பெற்றுப் பேணிக் காப்பவர்கள் பெற்றோர்; அவர்களுக்கு உரிமையுண்டு. நான் மறுக்க வில்லை. அதே சமயத்தில் ஈன்றெடுக்கப்பட்ட குழந்தை சமுதாயத்தின் சொத்து என்பதையும் அவர்கள் மறந்து விடக் கூடாது. சமுதாயத்திற்குச் சிறிதளவு தீங்கு செய்யும் குழந்தைகளைப் பெற்று வளர்த்தாலும் அதற்கு அவர்கள் பதில் சொல்லியே தீர வேண்டி ஏற்படும் சூல்களைச் சமைத்துக் கொடுத்தது அவர்கள் தானே?*

எனவே பிஞ்சிலிருந்து பெருகிவளர்ந்த முகஸ்துதி மனப்பான்மையை உடனுக்குடன் களைந்துவிட முடியாது. மேலே நான் குறிப்பிட்டது போல் இதற்குக் கடினமான பயிற்சி தேவைப்படும். பயிற்சிக்குப் பயந்தவர்கள் முகஸ்துதியை அழிக்கும் எண்ணத்தைக் கட்டோடு விட்டுவிடுவது தான் நல்லது. ஏனென்றால் இருப்பதெல்லாம் ஒரே வழி. அதை விட்டால் வேறு வழியில்லை!

இந்தப் பயிற்சி யாருக்குத் தேவை என்று கேட்கிறீர்களா? எல்லோருக்கும் இது தேவை தான். முகஸ்துதி என்னும் நோய் அனேகமாக எல்லோருடைய உள்ளத்திலும் தன் முத்திரை யை ஆழமாகப் பதித்து வைத்திருக்கிறது. ஆரம்பத்தில் இந்தப் பயிற்சி தயக்கத்தைக் கொடுத்தாலும் முடிவில்

*இமாம் கஸ்ஸாலியின் குழந்தை வளர்ப்பு என்னும் நூல் இது சம்பந்தமான முழு விவரத்தையும் பெற்றிருக்கிறது.

வெற்றி நிச்சயமாக உண்டு. இந்தப் பயிற்சியில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன: முகஸ்துதி ஏற்படுவதற்குரிய மூலகாரணங்களைக் கிள்ளி எறிவது; அதனால் இப்போது ஏற்படும் விளைவுகளைத் தடுப்பது-இந்த இரண்டையும் இப்போது நாம் முறையே ஆராய வேண்டும்.

முகஸ்துதிக்குக் காரணம் என்ன என்று உங்களுக்குத் தெரியும். சிந்தனை செய்யும் ஒவ்வொரு மனிதனுக்கும் அது தெரிந்தது தான். பதவி மோகம், வரட்டுக் கவுரவம் தான் இதற்கு மூலகாரணம். இது வளரும் போது பாராட்டில் மகிழ்ச்சியும் நிந்தனையில் வேதனையும் மற்றவர்களின் உழைப்பில் ஆசையும் தோன்றுகின்றன. எனவே பதவி மோகம் கொண்டவன் தன்னை மக்கள் பாராட்டும்போது ஆனந்தப்படுகிறான்; நிந்திக்கும்போது வேதனைப் படுகிறான்; அவர்களின் உழைப்பையும் ஊதியத்தையும் இலவசமாகப் பெற முற்படுகிறான்.

உலோபியான பணக்காரன் ஒருவன் பலர் முன்னிலை யில் பணத்தை வாரியிறைத்துத் தர்மம் செய்கிறான். ஏனெனில் அவர்களின் பாராட்டை அவன் எதிர்பார்க்கிறான். இங்குப் பாராட்டு காரணமாக அமைகிறது.

இரவெல்லாம் நின்று வணங்கும் பக்தர்களுக்கு மத்தியில் ஒருவன் சிறிது நேரம் இரவு வணக்கத்தில் ஈடுபடுகிறான். இங்கு பாராட்டைக் காரணமாகச் சொல்ல முடியாது. அந்தப் பக்தர்கள் அவனைப் பாராட்டமாட்டார்கள். ஏனெனில் அவனை விட அவர்களே அதிக நேரம் வணங்கு கிறார்கள். அவனுடைய செயலுக்குக் காரணம் அச்சம்; தன்னை மற்றவர்கள் சோம்பேறி என்று நினைத்து விடுவார் கள் என்னும் அச்சம்! மார்க்கத்தின் சட்டங்களை உணராமல் தீர்ப்புக் கொடுக்கிறவர்களும் இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் தாம். முட்டாள் என்று மற்றவர்கள் தீர்மானித்து விடுவார்களாம்!

எனவே ஒருவன் பொறுமைசாலி என்று பாராட்டைப் பெறுவதற்காகச் சில வேளைகளில் பொறுமையைக் கையாள்கிறான்; முன் கோபி என்ற நிந்தனையைத் தவிர்ப்பதற்காக வேறு சில வேளைகளில் பொறுமையைக் கைக்கொள்கிறான். முந்தியது பாராட்டை அடிப்படையாகக் கொண்டது; பிந்தியது அச்சத்தால் உருவாவது.

அறிஞன் எனும் பாராட்டுக்காகத் தத்துவங்களை அள்ளி வீசி விளக்கம் கொடுக்கும் ஒருவன், ''ஒன்றும் தெரியாத வன்'' எனும் சிந்தனையைத் தவிர்ப்பதற்காகத் தனக்குத் தெரியாதை மற்றவர்களிடம் கேட்க மறுக்கிறான். முந்தியது பாராட்டு; பிந்தியது அச்சம்.

இவ்வாறு தேவையில்லாததைச் செய்து தேவையுள்ள தை விடுத்து ஒருவன் மக்களின் அபிமானத்திற்குரிய வனாகும் போது வேறொரு தவறு நிகழ்கிறது. தன் பதவியையும் திறமையையும் வைத்து அவன் தன் காரியங்கள் அனைத்தையும் சாதித்துக் கொள்ள முற்படுகிறான். அவர்களிடமிருந்து பணத்தை மட்டுமின்றி, ஊழியத்தையும் எதிர்பார்க்கிறான்.

ஆகவே இந்த மூன்று காரணங்களால் தான் முகஸ்துதி இன்றைக்கு எங்கும் பரவி நிற்கிறது. இவற்றில் முந்தியது பாராட்டை எதிர்பார்க்கும் மனப்பான்மை. இரண்டாவது சிந்தனையை வெறுக்கும் குணம். மூன்றாவது மற்றவர்களை ஏய்த்துப் பிழைத்து ஏமாளியாக்கும் பெருந்தன்மை. இவற்றை அழிப்பது எப்படி என்னும் முழு விவரம் 'பதவி மோகம்' எனும் நூலில் இடம் பெற்றிருக்கிறது. அதனை மீண்டும் இங்கு எழுதி உங்களைப் பொறுமையிழக்க வைப்பது முறையல்ல. இந்த மூன்றும் ஒன்று சேரும் போது முகஸ்துதி தோன்று கிறது. எனவே நாம் இப்போது முகஸ்துதியை அழிப்பது எப்படி என்பதைப் பார்ப்போம்.

இந்த வழியில் சிந்தனை பெரிதும் பயன்படும். அமைதியாகச் சிந்தனை செய்கிறவர்களுக்கு முகஸ்துதியை அழிப்பது அப்படியொன்றும் சிரமமான காரியமல்ல. எனவே நீங்கள் நன்கு சிந்தனை செய்ய வேண்டும். அது ஒரு செல்வம். முற்கால மக்கள் அந்தச் செல்வத்தை முறைப்படி பயன்படுத்தியிருந்தால் வரலாறே மாறிப்போயிருக்கும்.

மக்களிடமிருந்து நீங்கள் பாராட்டை எதிர்பார்ப்பதும் நிந்தனையை வெறுப்பதும் இயற்கைக் குணங்கள். ஆனால் நீங்கள் எதற்காக அவர்களிடம் இந்த அளவுக்கு அபிமானம் வைத்திருக்கிறீர்கள்? மக்கட் கடலில் நீங்கள் ஒரு துளி. உங்கள் அந்தஸ்து அவர்களுக்கும் உண்டு. உங்கள் திறமை அவர்களிடமும் உண்டு. அவர்கள் உங்களிடம் எதையும் எதிர்பார்க்காத போது நீங்கள் மட்டும் அவர்களிடம் எதை எதையோ எதிர்பார்க்கிறீர்களே, காரணம் என்ன? அவர்களை விட உங்களை நீங்களே உயர்த்தி மதிக்கிறீர்களா? உண்மையிலேயே உங்களுக்கும் அவர்களுக்குமிடையில் ஒரு வேலி இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா? சமத்துவத்தைப் போதிக்கும் இஸ்லாம் இதற்கு அனுமதி கொடுக்கிறது என்றா எண்ணுகிறீர்கள்?

மக்களிடமில்லாத சிறப்புக் குணங்கள், செயல்கள் உங்களிடமிருந்தால், உண்மையிலேயே நீங்கள் பாராட்டுக் குரியவர் தான். இறைவனும் வானவர்களும் பாராட்டுகிறார்கள். இந்த மேலிடத்துப் பாராட்டு உங்களுக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லையா? இறைவனை விட மக்களை உயர்ந்தவர்கள் என்றா நீங்கள் கருதுகிறீர்கள்? எனவே உங்களிடம் சிறப்பு இருந்தால் இறைவனின் பாராட்டு நிச்சயம் உண்டு. சிறப்பு இல்லையேல் மக்களின் பாராட்டை நீங்கள் எப்படி எதிர்பார்க்கலாம்? உங்களை விட மற்றவர்கள் சிறந்து விளங்கும்போது நீங்கள் எந்தக் கோணத்திலிருந்து பாராட்டுக்கு ஆசைப்படுகிறீர்கள்?

நிந்தனைக்குப் பயப்படுவதும் இத்தகையதுதான். நீங்கள் நேரிய வழியில் நடக்கும்போது உங்கள் மீது வீசப்படும் நிந்தனைகளுக்குச் சக்தி இருக்காது; நிச்சயமாக நம்புங்கள். ஆனால் நான் ஒன்று கேட்கட்டுமா? மற்றவர்களின் பார்வைக்கு அஞ்சும் நீங்கள் இறைவனின் பார்வையை மறந்துவிட்டீர்களா? உங்கள் மர்மங்கள் அவனுக்குத் தெரியாது என்று நம்புகிறீர்களா? மக்களின் பார்வையைவிட இறைவனின் பார்வை ஆழமானது;அவர்களின் நிந்தனையை விட அவனுடைய நிந்தனை கொடியது. ஒன்று மட்டும் நிச்சயமானது: நீங்கள் எவ்வளவு நன்மைகளைச் செய்தாலும் ஒருசாரார் உங்களை நிந்திக்கத் தான் செய்வார்கள். உலகில் தோன்றிய மகான்கள் அனைவரும் மக்களின் நிந்தனைக்குப் பலியானவர்களே. ஆனால் அவர்கள் நிந்தனைக்கு அஞ்சவில்லை.

இத்தகையது தான் மக்களின் உதவியைஎதிர்பார்ப்பதும். நீங்கள் மனிதர்; உங்களைப் போன்றவர்களே அவர்கள். அவர்களிடம் உள்ளது உங்களிடமும் இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கைக்குத் தேவையான ஆற்றல்களைப் பெற்றிருக்கிறான். எந்த மனிதனாலும் எந்த மனிதனையும் நிரந்தரமாக ஆதரிக்க முடியாது. இறைவனின் துணை கொண்டு தனித்து இயங்குவதற்காகப் படைக்கப் பட்டவன் மனிதன். அவன் மற்றவர்களின் கையை எதிர்பார்த்து நிற்கும் போது இந்தச் சிறப்புக்கு இழுக்கு ஏற்படுகிறது.

வருமானம் என்பது வரையறுக்கப்பட்ட ஒன்று. அது இறைவனிடமிருந்து மனிதனுக்கு அளந்து கொடுக்கப் படுகிறது. மனிதர்களிடமிருந்து அடையும் சலுகை முடிவில் அவமானத்தையும் வேதனையையும் கொண்டு வரும். மக்களிடமிருந்து பெறும் அற்பச் சலுகைக்காக முகஸ்துதிக் காரர்கள் இறைவனின் அன்பை உதறித் தள்ளுகிறார்கள்.

மக்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஏனெனில் நீங்கள் மக்களில் ஒருவரல்லவா? அவர்கள் வருமானத்தைப் பெருக்க முற்படும் போது வறுமை வந்து கட்டியணைக்கிறது. வறுமையைப் பொருட்படுத்தாமல் வாழ முற்படும் போது தானாகவே செல்வம் வருகிறது. ஏதோ ஒரு சக்தி-மனிதனின் சக்தியைவிடப் பல கோடி மடங்கு வலிமை பொருந்திய ஒரு சக்தி, மனிதனின் வாழ்க்கை நெடுகிலும் தன் ஆற்றலைக் காட்டிக் கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் உணர்கிறார்கள்.

அதை நீங்கள் ஏன் உணரத் தவறிவிட்டீர்கள்? அந்தச் சக்தியைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் திறமை அவர்களிடம் இருக்கிறது என்று நம்புகிறீர்களா? அறவேயில்லை. உங்களைப் போலவே அவர்களும்தம் தேவைகளுக்குப் பெரியதொரு சக்தியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.நீங்கள் நினைப்பது போல் அவர்களிடம் சக்தி இருந்திருந்தால் வரலாற்றின் திக்கே மாறிப்போயிருக்கும். வறுமை, பிணி, வேதனை, முதலிய அனைத்தையும் அவர்கள் வென்றிருப்பார்கள். ஏனெனில் மக்கட் திரளில் பெரும்பாலோர் இவற்றை வெறுக்கிறார்கள்.

அவர்கள் வெறுப்பது என்னவோ உண்மை தான்.ஆனால் எதை வெறுக்கிறார்களோ அதை அனுபவிக்க வேண்டி ஏற்படுகிறது: எதை விரும்புகிறார்களோ அதைத் துறக்க வேண்டி ஏற்படுகிறது. எண்ணியதை அடைகிற வர்கள் மிகச் சிலர். அவர்கள் எண்ணத்திலும் செயலிலும் முற்றிலும் மாறுபட்டிருப்பார்கள். இறைவனைத் தவிர்த்து வேறு யாரையும் அவர்கள் மதிக்க மாட்டார்கள்.

சலுகை பெறுகிறவர்கள் யாராயிருந்தாலும்-மற்றவர்களிடமிருந்து இலவசமாகக் கிடைக்கும் சலுகைகள்

இறுதியில் மனவேதனையையும் அவமானத்தையும் அவசியம் தோற்றுவிக்கும். சலுகை பெறுகிறவர்கள் நாளடைவில் சலுகை செய்தவர்களுக்குத் தலைகுனிய வேண்டி ஏற்படும். இலசவச் சலுகை பெற்ற எவரும் இறுதிவரை நிம்மதியோடு இருந்ததில்லை.

எனவே நீங்கள் முகஸ்துதியை வேரோடு களைய விரும்பினால் அதைப் பற்றிய முழு ஞானத்தையும் அதனால் விளையும் விபரீதங்களையும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். அப்புறம் நீங்கள் தெரிந்தவற்றை நடை முறைக்குக் கொண்டு வர வேண்டும். இது சிரமமானதொரு வேலை தான். என்றாலும் ஒருமித்த மனத்தோடு செயலாற்றி னால் விரைவில் சிரமம் குறையும்; அப்புறம் சிரமமே இருக்காது. சிரமப்படத் துணிவில்லாதவர்கள் இந்த வழியில் எந்த முன்னேற்றத்தையும் அடைய முடியாது. ''தம் குணங்களை மக்கள் மாற்றிக் கொள்ளாத வரை இறைவன் அவர்களுக்கு அளிக்கும் அருட்கொடைகளை மாற்ற மாட்டான்!'' என்று திருக்குர்ஆன் தீர்ப்புக் கொடுக்கிறது.

ஆகவே, நீங்கள் முயற்சி செய்யுங்கள்; இறைவன் வழி காட்டுவான்-நீங்கள் தட்டுங்கள்; அவன் திறந்துவிடுவான்!

மனிதனின் மனம் விசித்திரமானது என்று உங்களுக்குத் தெரியும். எல்லா நன்மைகளுக்கும் எல்லாத் தீமைகளுக்கும் மனமே காரணம் என்பதும் உங்களுக்குத் தெரியாததல்ல. தெளிந்த மனமும் குழப்பமற்ற ஞானமும் பெற்றவர்களிடம் என்றைக்குமே உங்களால் முகஸ்துதியை எதிர்பார்க்க முடியாது. முகஸ்துதியால் ஏற்படும் நன்மை தீமைகளை அறிந்து கொள்வதால் ஓரளவு வெற்றி காணலாம்.

ஆனால் முகஸ்துதியை அழிப்பதற்கு இதுமட்டும் போதாது. சில வேளைகளில் உங்களுக்கே தெரியாமல்

உங்கள் மனத்தில் முகஸ்துதி முளைவிடக் கூடும். நீங்கள் இறைவணக்கம் புரிந்து கொண்டிருக்கும் போது, ''மற்ற வர்கள் நம்மைப் பார்த்தால் தான் என்ன?'' என்று ஒரு வினா உங்கள் மனப் பரப்பில் தோன்றும். அப்புறம் மக்களிட மிருந்து பாராட்டுப் பெற வேண்டும் என்றும் ஆசை துளிர் விடும். பிறகு உங்கள் இறை வணக்கம் முழுவதும் முகஸ்துதி யாக மாறிவிடும்.

எனவே நீங்கள் முகஸ்துதியைக் கட்டோடு அழிக்க நினைத்தால், மனத்தில் தோன்றும் எண்ணங்கள் ஒவ்வொன் றையும் தணிக்கை செய்யுங்கள். இறை வணக்கத்தின் போது இறைவனைத் தவிர்த்து வேறு எதற்கும் உங்கள் மனத்தில் இடம் கொடுக்காதீர்கள். உங்கள் மனம் எதிர்வாதம் புரிந்தால் இப்படிக் கூறுங்கள்:

''மனமே! மக்களிடம் நீ எதை எதிர்பார்க்கிறாய்? நீ செய்வது நற்காரியம் தான் என்றால் மக்களிடமிருந்து அதற்குப் பாராட்டு வரவேண்டும் என்பது என்ன ஆசை? இறைவனின் பாராட்டு உனக்குப் போதாதா? மக்கள் உன்னைப் பற்றியும் உன் செயலைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஏன் ஆசைப்படுகிறாய்? உன் செயலை இறைவன் தெரிந்திருக்கிறானே, அது போதா?...''

நீங்கள் எந்தக் காரியம் செய்தாலும் ஒருமித்த மனத்தோடு செய்யுங்கள். இறைவணக்கத்தின் போது இறைவனைப் பற்றியே எண்ணுங்கள். மக்களைப் பற்றி-அவர்களின் கருத்துக் களைப் பற்றிச் சிறிதும் எண்ணிப் பார்க்காதீர்கள். மக்கள் உங்கள் செயலைப் பார்த்துப் பாராட்ட வேண்டும் என்னும் ஆசைக்கு அணைபோடுங்கள். ஏனென்றால் மக்களைப் படைத்த மன்னன் உங்களை எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறான். மக்களின்

பார்வையைவிட அவன் பார்வை அன்பானது, ஆழமானது. எனவே, அவனுடைய பாராட்டுக்கு ஆசைப்படுங்கள். எச்சரிக்கிறேன், அவனுடைய வெறுப்புக்கு இலக்காகி விடாதீர்கள். அப்புறம் மக்களின் பாராட்டு உங்களுக்கு எந்த நன்மையையும் செய்யாது!

நம்மிடையே சிலர் இருக்கிறார்கள். நல்வழியில் நடக்கும் எண்ணத்துடன் அவர்கள் எத்தனையோ பயிற்சி களில் சிரமப்பட்டிருக்கிறார்கள். முகஸ்துதியை அழிப்பதற்கு அவர்கள் எத்தனையோ வழிகளில் பாடுபட்டிருக்கிறார்கள். இருந்தும் சில வேளைகளில் அவர்களுக்கே தெரியாமல் முகஸ்துதி தோன்றி விடுகிறது. அவர்கள் முகஸ்துதியை வெறுக்கத் தான் செய்கிறார்கள்; என்றாலும் எப்படியோ முகஸ்துதி உருவாகி விடுகிறது.

இது போன்ற ஒரு சூழல் நம்மில் பலருக்கு ஏற்பட்டிருக் கலாம். அதற்காக நாம் ஒன்றும் வருந்த வேண்டியதில்லை. நம் சக்திக்குட்பட்ட வரை நாம் முயற்சி செய்ய வேண்டியது முக்கியம். அதற்குப் பின்னால் ஏற்படும் நிலைக்கு நாம் பொறுப்பாளியல்ல.

ஒன்று மட்டும் நிச்சயமானது, தீய சக்திகளே மனிதனின் மனத்தில் தீய உணர்வுகளை ஏற்படுத்துகின்றன. தீய உணர்வே தீய செயலுக்கு வித்து வைக்கிறது. தீய சக்திகளிட மிருந்து தற்காத்துக் கொள்ளும் எண்ணத்துடனேயே நாம் பல்வேறு பயிற்சிகளில் ஈடுபடுகிறோம். பயிற்சியால் எதையும்-யாரையும் திருத்திவிடலாம் என்பது நம் வாதம். ஆனால் என்ன தான் பயிற்சி பெற்றாலும் எந்த மனிதனாலும் தீய சக்திகளைக் கட்டோடு அழித்துவிட முடியாது. இப்போது இல்லாவிட்டாலும் எப்போதாகிலும் அவை தம் போதனை களை வெளியிடத்தான் செய்யும்.

எனவே மனத்தில் தோன்றும் சிறு சிறு எண்ணங்களை எல்லாம் தணிக்கை செய்வது சிரமம். அவற்றிற்குத் தண்டனை கொடுப்பது அநாகரிகம். இதற்கு நபித் தோழர்களே ஆதாரம் தருகிறார்கள். தம் மனத்தில் தோன்றும் தீய உணர்வுகளை அவர்கள் பெருமானாரிடம் கூறினார்கள்.

பெருமானார் சுருக்கமாக விடையளித்தார்கள். ''உண்மையான நம்பிக்கையுள்ளவர்களுக்கு அப்படித் தான் இருக்கும்!'' எனவே நம் மனத்தில், நமக்குத் தெரியாமல் துளிர் விடும் முகஸ்துதியைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் தீய எண்ணம் தோன்றுவதும் மறைவதும் மனிதனின் இயற்கைக் குணங்கள். அவற்றை மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்குமில்லை! எனக்குமில்லை!

ஆனால் மனத்தில் தோன்றும் அந்த எண்ணங்களை உரமூட்டி வளர்க்காதீர்கள்; இயன்றவரை சிந்தனையை வேறு திசைக்குத் திருப்ப முயற்சி செய்யுங்கள், இல்லையேல் துரும்பாகத் தோன்றிய எண்ணம் தூணைப்போல் வளர்ந்து மலையைப் போன்ற தீமையை உருவாக்கிவிடும்.

5. மனத்தை வென்றவர்கள்

மனத்தை வெல்வது! இது பெரும்பாலோருக்குக் கிடைக்காத ஒரு செல்வம். இந்தச் செல்வத்தை அடைந்தவர்கள் உலகிலுள்ள வேறு எந்தச் செல்வத்தையும் பொருட்படுத்துவதில்லை. இந்த ஒரே ஒரு செல்வத்தை அடைவதற்காக அவர்கள் தம்மிடமுள்ள இதர செல்வங்கள் அனைத்தையும் தியாகம் செய்கிறார்கள். பொறாமை, வெற்றுச் சிந்தனை, காமம் முதலிய எதுவும் இவர்களை அண்ட முடியாது. இவர்களின் உள்ளத்தில் முகஸ்துதிக்கு இடம் கிடையாது.

மனத்தை வென்றவர்களை நான்கு பிரிவுகளில் கட்டுப்படுத்தலாம்.

முதற் பிரிவினர் : இவர்கள் மனத்தில் தோன்றும் தீய எண்ணத்தை உடனுக்குடன் புறக்கணிப்பார்கள்; மனப் போராட்டம் நடத்துவார்கள். இந்தப் போராட்டத்திற்குக் காலம், இடம் எதுவும் கிடையாது. அடிக்கடி போராட்டம் நடக்கும். நடைபெறும் போராட்டங்கள் அத்தனையும் வெகு நேரம் நீடிக்கும். தோற்றம் பெறும் எண்ணங்கள் ஒவ்வொன்றும் கவனத்துடன் தணிக்கை செய்யப்படும். இந்த மனப்போராட்டம் சிறப்பிற்குரியது தான். என்றாலும் இதில் ஒரு குறையுண்டு.

உள்ளம் என்பது ஆழம் காணமுடியாத கடல் போன்றது. அதில் தோன்றி மறையும் எண்ணங்கள் எண்ணற்றவை. நிறுத்திவிட்டவர்கள் ஒவ்வொரு எண்ணத்தையும் தணிக்கை செய்வதால்-மனப் போராட்டம் நடத்துவதால் இறை

சிந்தனைக்கே நேரம் இல்லாமற் போய்விடுகிறது. இதனால் அவர்கள் தம்முடைய லட்சியத்தை மறந்து ஆயுள் முழுவதையும் மனப் போராட்டத்திலேயே கழிக்க வேண்டி ஏற்படுகிறது-இந்தக் குறை மறுக்க முடியாத ஒன்று; தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று!

இரண்டாம் பிரிவினர் : இவர்கள் முதற் பிரிவினரைப் போல் மனப் போராட்டம் நடத்துவதில்லை; தோன்றும் தீய எண்ணத்தைப் புறக்கணித்து விடுவார்கள். ஏனெனில் மனப் போராட்டம் நடத்துவது சிறப்பான ஒரு காரியமானாலும், அது இறை சிந்தனைக்குரிய நேரத்தைப் பறித்துக் கொள்கிறது என்று அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இவர்கள் முதற் பிரிவினரை விடச் சற்று உயர்ந்தவர்கள்.

மூன்றாம் பிரிவினர் : மனத்தில் உருவாகும் தீய எண்ணங்களை இவர்கள் தணிக்கை செய்வதுமில்லை, மனப்போராட்டம் நடத்துவதுமில்லை. புறக்கணிப்பதற்குக் கூட சிறிது நேரம் தேவைப்படுகிறதல்லவா? அந்தச் சிறிது நேரத்தையும் அவர்கள் செலவிடுவதில்லை. எனவே, தம் பொழுது முழுவதையும் இறை சிந்தனைக்குச் செலவிடுகிறார்கள்.

நான்காம் பிரிவினர் : இவர்கள் முந்திய மூன்று பிரிவனருக்கும் முற்றிலும் மாறுபட்டவர்கள். தீய எண்ணம் தோன்றும் போதெல்லாம் இவர்களின் இறை சிந்தனை வலுப்படும். தீய எண்ணத்தை இவர்கள் பொருட்படுத்துவதில்லை. முந்திய இரு பிரிவினரை விடப் பிந்திய இருபிரிவினர் உயர்ந்தவர்கள்; முன்னவரின் மனத்தைவிடப் பின்னவரின் மனம் சக்தி மிக்கது; தெளிவானது.

6. நன்மைக்கு விளம்பரம்

நன்மைகளை மறைத்துச் செய்ய வேண்டும் என்றும், நன்மைக்கு விளம்பரம் கொடுப்பது கூடாது என்றும் நான் எழுதினேன். யாருக்கும் தெரியாமல் நன்மைகள் செய்யும் போது ஒருமித்த மன நிலை உருவாகிறது. நாலுபேருக்கு மத்தியில் நற்காரியம் செய்யப்படும் போது முகஸ்துதி தோன்றுகிறது. இதனால் தான் நான் அப்படிக் குறிப்பிட்டேன்.

ஆனால் சில வேளைகளில் பகிரங்கமாக நற்செயல் புரிவதிலும் நன்மை இருப்பதுண்டு. நீங்கள் நற்காரியம் செய்வதைப் பார்த்து நாலுபேர் உங்களைப் பின்பற்றக் கூடுமல்லவா? இந்த விதத்தில் அறவழி சம்பந்தமாக ஆழமான பற்றுதலை மக்களின் மனத்தில் நீங்கள் தோற்றுவிக்கலாம். இந்த உண்மையைத் திருக்குர்ஆனின் வசனம் ஒன்று தெளிவுப்படுத்துகிறது.

''நீங்கள் செய்யும் தர்மங்களைப் பகிரங்கப்படுத்தினால் அது உங்களுக்கு நல்லது தான். அதை நீங்கள் மர்மமாகச் செய்தால்-ஏழைகளுக்குக் கொடுத்தால் அதுவும் நல்லதே!''

நன்மைக்கு விளம்பரம் கொடுப்பது வெறுக்கப் பட்டாலும் ஒரு சில கட்டங்களில் அது நல்ல விளைவை ஏற்படுத்துகிறது. ஆகவே அந்தக் கட்டத்தில் அது பாராட்டப் படுகிறது. குறிப்பாக இரண்டு வழிகளில் நன்மைக்கு விளம்பரம் செய்யப்படுகிறது. பகிரங்கமாக நன்மை செய்வது; செய்த நன்மையைப் பற்றி விரிவுரை கொடுப்பது! முதல் வழி சக்தி மிக்கது. அதில் ஆழமான பிரச்சாரம் உண்டு. இரண்டாம் வழியில் ஏற்படும் நன்மைகளைவிட இதில் ஏற்படும் நன்மைகள் அதிகம்.

முதல் வழி: திரண்ட கூட்டத்தை நிறுத்தி வைத்துத் தர்மம் செய்யும் முறை எங்கும் வழக்கிலிருந்து வருகிறது. இது எப்போது தோன்றியது என்று சொல்ல முடியா விட்டாலும், இப்போது இதை நீங்கள் எங்கும் காணலாம்.

ஊரிலுள்ள பணக்காரர் ஒருவர் இந்த வழியில் பிரவேசிக்கும் போது, அவரைப் பார்த்து மற்றப் பணக்காரர் களும் அந்த வழியில் இறங்குவார்கள். இதனால் மக்களிடம் தர்ம சிந்தனை வளரும். பெருமானாரின் காலத்தில் மதீனா வாசி ஒருவர் இப்படித் தான் செய்தார். அவர் செய்த தர்மம் நல்ல விளம்பரத்தைப் பெற்றது.

ஆனால் பெருமானார் அதை மறுக்கவில்லை. ''ஒரு மனிதன் நல்ல காரியம் ஒன்றை உருவாக்கினால், அவனுக்கு இரட்டிப்புப் பயனுண்டு. தன்னுடைய நன்மையோடு தன்னைப் பின்பற்றியவர்களின் நன்மையையும் அவன் [illegible]கிறான்!'' என்று குறிப்பிட்டார்கள்.

என்றாலும் சில கட்டங்களில் பகிரங்கப்படுத்துவது சட்டத்திற்கு முரண்படக்கூடும். உங்களுக்கு எதிரில் நிற்கும் ஏழை ஒருவனுக்கு நீங்கள் ஏதோ சிறிது தர்மம் செய்ய முற்படுகிறீர்கள். நீங்கள் பகிரங்கப்படுத்துவதால் அவன் மனம் புண்படும் என்று தெரிந்தால் அறவே பகிரங்கப்படுத்தக் கூடாது. ஒரு மனிதனின் மனத்தைச் சொல்லாலோ செயலாலோ புண்படுத்தும் உரிமை எவருக்குமில்லை.

தர்மத்தைப் போலவே தொழுகை, நோன்பு, ஹஜ் முதலியவற்றையும் இடம், பொருள், ஏவல் பார்த்துப் பகிரங்கப்படுத்தலாம். அடுத்த வீட்டுக்காரர் நீங்கள் செய்யும் நன்மைகளை அப்படியே பின்பற்றுகிறார் என்று தெரிந்தால், நள்ளிரவில் நீங்கள் இறைவணக்கம் புரியும் போது உயர்ந்த தொனியில் திருக்குர்ஆனின் வசனங்களை ஓதுங்கள். ஆனால் முகஸ்துதி ஏற்பட்டு விடக் கூடாது; எச்சரிக்கிறேன்.

சில காரியங்கள் பகிரங்கமாகவே செய்யப்படுகின்றன: ஹஜ், 'ஜும்ஆத்' தொழுகை முதலியவை இந்தப் பிரிவைச் சேர்ந்தவை. இவற்றில் ஆர்வமும் உற்சாகமும் காட்டுவது சட்டப்படிக் குற்றமல்ல. ஆனால் உங்களைப் பார்த்து எத்தனை பேர் பின் பற்றினாலும் உங்கள் உள்ளத்தில் முகஸ்துதி இருக்கக் கூடாது. இல்லையேல் உங்களால் எந்தப் பெருமையையும் எதிர்பார்க்க முடியாது.

எனவே உங்கள் செயல்கள் மற்றவர்களால் கண்காணிக்கப்பட்டுப் பின்பற்றப்படுகின்றன என்று நீங்கள் நிச்சயமாக அறிந்தால் மட்டுமே உங்கள் செயல்களைப் பகிரங்கப்படுத்தலாம். இது நிச்சயமில்லாத ஒன்று. அத்துடன் உங்கள் மனத்தில் தோன்றும் எண்ணங்களையும் நன்கு ஆராய்ந்து வைத்திருக்க வேண்டும். முகஸ்துதி என்பது எப்போது-எப்படித் தோன்றும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அது எந்த வினாடியும் தோன்றலாம்; எப்படியும் தோன்றலாம். ஆகவே நீங்கள் நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

இது சிக்கலும் சிரமமும் நிறைந்த ஒரு பயிற்சி. தேர்ச்சியற்றவர்களும், பாமரர்களும் தம்மை அறியாமலே முகஸ்துதிக்குப் பலியாகி விடுகிறார்கள். அவர்கள் முகஸ்துதியை வெறுக்கத் தான் செய்கிறார்கள். இருந்தும் எப்படியோ முகஸ்துதி தன் முத்திரையை அவர்கள் மனத்தில் பதித்து விடுகிறது. இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. பாவம்! மற்றவர்களுக்கு வழிகாட்டும் முயற்சியில் இவர்கள் தம்மையே அழித்துக் கொள்கிறார்கள். நடுக்கடலில் அலைகளுக்கு மத்தியில் தத்தளிப்பவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் எத்தனையோ பேர் உயிர் துறந்திருக்கிறார்கள்.

இரண்டாம் வழி : தாம் செய்யும் நன்மைகளை மற்றவர் களுக்குக் கூறுவதன் மூலம் வேறு சிலர் பிரச்சாரம் செய்கிறார்

கள். இதிலும் ஓரளவு பயன் இருக்கத் தான் செய்கிறது. அவர்களிடம் நாவன்மை இருந்தால் கேட்பவர்களின் மனத்தில் புனித லட்சியத்தையே ஏற்படுத்தி விடலாம்.

ஆனால் இந்த வழி ஆபத்தானாது. மனிதனின் நாவு துரிதமாக இயங்கும் தன்மையுடையது. எல்லையை மீறாமல் நல்வழியில் பிரச்சாரம் செய்வது மிகச் சிரமம். இந்த வழியில் பிரவேசிக்கும் பலர், சுய பாராட்டுக்குத் திரும்பி விடுவதை நாம் பார்த்திருக்கிறோம். எனவே அவர்கள் பேசுவதற்குமுன் எல்லை வகுத்துக் கொள்ள வேண்டும்; ஒவ்வொரு வார்த்தையையும் அளந்து பார்த்துப் பேச வேண்டும்.

நபித் தோழர்களில் சிலர் இதற்கு வழிகாட்டிகளாகச் செயலாற்றியிருக்கிறார்கள்.

அபூசுப்யான் மரணப்படுக்கையில் கிடந்த போது உறவினர் அழுதார்கள். அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா? அவர் கூறிய வார்த்தைகள் அடியில் இடம் பெறுகின்றன.

''அழ வேண்டாம். நான் முஸ்லிமான பிறகு எந்தத் தவறும் செய்ததில்லை. எனவே மறுமையில் எனக்கு எந்தத் தண்டனையும் இருக்காது''.

தம்மைப் பார்த்து-தம் உறுதியைப் பார்த்து மக்கள் பின்பற்ற வேண்டும் என்னும் பரந்த நோக்கமே இதற்குக் காரணம். இதற்குத் தற்பெருமை என்று பெயரிட முடியாது. இதில் முகஸ்துதிக்கும் இடமில்லை.

ஆனால் இதே வார்த்தைகளைச் சிலர் பிறருடைய பாராட்டுக்காகவும் பயன்படுத்தத் தான் செய்கிறார்கள்; நான் மறுக்கவில்லை. யார் எது சொன்னாலும் சொல்கிறவர்களைப் பொறுத்துத் தான் விளைவு ஏற்படுகிறது. மக்களின்

மரியாதைக்குரியவர்கள் அப்படிச் சொல்லும் போது பல்லாயிரம் பேர் பின்பற்றுவார்கள்; பெருமையடிப்பவர்கள் சொல்லும் போது பல்லாயிரம் பேர் வெறுப்படைவார்கள். ஒன்று மட்டும் நிச்சயமானது. மக்களின் மனத்தில் தீய எண்ணம் ஏற்படாதவாறு நன்மைகளைப் பகிரங்கப் படுத்துவது நல்லது; அதில் எத்தனையோ பயன்கள் இருக்கின்றன. ஆனால் நிபந்தனையை மறந்து விடக் கூடாது.

இதனால் நன்மையைக் காட்டிப் பெருமையடிப்பவர்களுக்குத் தீங்கு ஏற்பட்டாலும், அவர்களைப் பார்த்துத் திருந்தும் மக்களுக்குப் பெரும் பயனுண்டு. ''இந்த மார்க்கத்தை இறைவன் தீயவர்களாலும் பண்பில்லாதவர்களாலும் உறுதிப் படுத்துவான்'' எனும் நபிக் கருத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

தனி மனிதனின் சிறப்பைவிடச் சமுதாயத்தின் சிறப்பு முக்கியமானது. தனி மனிதன் அனுபவிக்கும் துன்பத்தை விடச் சமுதாயம் அனுபவிக்கும் துன்பம் கொடியது. தனி மனிதனின் மகிழ்ச்சியை விடச் சமுதாயத்தின் மகிழ்ச்சி அவசியமானது.

எனவே சமுதாயத்தின் உயர்வுக்காக தனிமனிதன் நஷ்டப்படுவது வரவேற்கத்தக்கதே. ஆழ்ந்த கண்ணோட்டமும் அசையாத அறிவும் பெற்றவவர்களால் இந்த உண்மையை என்றைக்கும் மறுக்க முடியாது.

7. நிந்தனைக்கு அஞ்சுங்கள்

சற்றுப் பொறுங்கள்; அவசரப்படாதீர்கள். மக்களின் பாராட்டுக்கும் அவர்களின் நிந்தனைக்கும் ஒரு மனிதன் முக்கியத்துவம் கொடுக்கும்போது தான் முகஸ்துதி உருவாகிறது என்று நான் குறிப்பிட்டது உண்மை தான். ஆனால் இன்னும் கொஞ்சம் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், சில வேளைகளில் மக்களின் நிந்தனைக்கும் ஓரளவு முக்கியத்துவம் கொடுக்கத் தான் வேண்டும் என்னும் உண்மை தெரியும்.

மக்களின் நிந்தனைக்கு அஞ்சுகிறவர்கள் பெரும்பான்மை ஒரே விதமாகவே நடந்து கொள்கிறார்கள். நாலு பேருக்கு மத்தியில் அவர்கள் எதைச் செய்கிறார்களோ அதைத் தனிமையில் செய்வதில்லை. தனிமையில் எதை அவர்கள் செய்கிறார்களோ அதை நாலுபேருக்கு முன்னால் செய்யத் துணிவு இருப்பதில்லை.

இதனால் இறைவணக்கத்தைப் பார்த்துத் தனிமையில் வெறுப்படையும் ஒருவன் வெள்ளிக் கிழமைத் தொழுகையின் போது மணிக்கணக்கில் பள்ளியைத் தேய்க்கிறான். நாலு பேருடைய கவனத்தைக் கவருவதற்காகத் தர்மம் செய்யும் ஒருவன் தனிமையில் தான் செய்த தர்மம் குறித்து வருந்துகிறான். இதற்குக் காரணம் என்ன? தன் தவறுகளை மக்கள் தெரிந்து கொண்டால் இகழ்வார்கள் என்பது சரியான காரணமல்ல. தன்னை மற்றவர்கள் தூயவன் எனப் பாராட்ட வேண்டும் என்று அவன் ஆசைப்படுகிறான். எனவே அவன் மனத்தில் கசப்பை வைத்துக் கொண்டு இனிப்பாக உரையாடுகிறான். இது தான் சரியான காரணம்.

இதனால் தான் உமர் (ரலி) அவர்கள் இப்படிக் கூறினார்கள்:''பகிரங்கமான செயலைச் செய்யுங்கள்.

தனிமையில் எதைச் செய்கிறீர்களோ அதை மக்களுக்கு முன்னால் செய்யுங்கள்.....''

இந்தக் கருத்துக்கு அபூ முஸ்லிம் என்ற அறிஞரின் கருத்து விளக்கம் கொடுக்கிறது. ''மலஜல உபாதைகள், சேர்க்கை முதலியவற்றைத் தவிர்த்து வேறு எந்தக் காரியம் செய்தாலும் நான் மக்களின் கண்ணோட்டத்தைப் பொருட்படுத்துவதில்லை!''

இவ்வாறு உங்களால் நடக்க முடிந்தால் மக்களின் நிந்தனைக்குத் தாராளமாக அஞ்சுங்கள்; உங்கள் தவறு அம்பலமாகி விட்டால் வருந்துங்கள்-தவறு கிடையாது.

மனிதன் -அவன் எவ்வளவு பெரிய அறிஞனாயிருந்தாலும் தவறு செய்யும் குணமுள்ளவன். தெரிந்தோ, தெரியாமலோ ஒவ்வொரு மனிதனும் தவறு செய்திருக்கிறான். செய்த தவறுகளைப் பகிரங்கப்படுத்துவது கடமையல்ல; அது மடமை. அவற்றை மூடி மறைப்பது அறியாமையல்ல; அறிவுடைமை. இறைவனின் திருப்பெயர்களில் 'குற்றங்களை மூடி மறைப்பவன்' என்று ஒரு பெயர் இருப்பதை நீங்கள் தெரிந்திருக்கலாம்.

ஒரு மனிதன் தான் செய்த தவறுகளை எட்டு விதங்களில் மூடி மறைக்கலாம். அப்போது எட்டுக் காரணங்கள் தோன்றுகின்றன.

1. அவமானத்திலிருந்து காக்கப்பட்ட ஒருவன் இறைவனைப் பாராட்ட வேண்டும். ஏனெனில் மானத்தைக் காத்தவன் அவனே. அவன் எண்ணியிருந்தால் குற்றவாளிக்கு நீங்காத அவமானத்தை ஏற்படுத்தியிருக்க முடியும்.

2. தீய செயல்களை இறைவன் வெறுப்பது போல் அவற்றைப் பகிரங்கப்படுத்துவதையும் அவன் வெறுக்கிறான்

என்பதை மனிதன் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே இறைவன் மனிதன் செய்யும் தவறுகளை மறைத்து வைக்கிறான். அவனுடைய கருத்துக்கு மனிதர்களாகிய நாம் மதிப்புக் கொடுக்கத் தான் வேண்டும். ''ஒருவன் தவறு செய்து விட்டால் அதை அவன் மூடி மறைக்கட்டும்!'' என்று பெருமானார் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

3. நீங்கள் செய்த தவறுகளை மக்கள் தெரிந்து கொள்ளும் போது அவர்கள் உங்களை நிந்திப்பார்கள்; உங்கள் மனம் வேதனைப்படும். இந்த வேதனையிலேயே இறைவணக்கத்தை நீங்கள் மறக்க வேண்டி ஏற்படும். எனவே இறைவணக்கத்திற்கு இடையூறு ஏற்படக்கூடாது என்னும் எண்ணத்துடன் நீங்கள் தவறுகளை மறைக்கலாம்.

4. மக்களின் நிந்தனையால் உங்கள் மனம் வேதனைப் படும் என்று தோன்றினால் அந்த வேதனையைத் தவிர்ப்ப தற்கு முயற்சி செய்யுங்கள். நீங்கள் செய்த தவறுகளுக்குத் திரை போடுங்கள்.

5. உங்களை நிந்திப்பவர்கள் அந்த நிந்தனை மூலம் இறைவனின் வெறுப்பை வாரிக் கட்டிக் கொள்கிறார்கள். எனவே அவர்கள் குற்றவாளிகளாக மாறுகிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கு நீங்கள் முயற்சி செய்தால் உங்கள் முயற்சி பாராட்டுக்குரியது. இதில் பொதுநலம் கலந்திருக்கிறது. ''உங்களைப் போல் பிறரையும் கவனியுங்கள்'' எனும் நபிக் கருத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

6. நீங்கள் செய்த தவறுகளை மற்றவர்கள் ஆதாரமாக வைத்துக் கொண்டு உங்களுக்குத் தொல்லை செய்யக் கூடாது என்னும் எண்ணமிருந்தால் உங்கள் குற்றங்களை மறைத்து வையுங்கள். உங்கள் தவற்றுக்கு நீங்கள் மன்னிப்பு

கோரலாம். மற்றவர்களின் தவற்றுக்கு வித்திட்டு விடாதீர்கள்.

7. உங்கள் குற்றங்களை மற்றவர்கள் உணர்ந்து கொள்ளும் போது உங்களுக்கு வெட்கம் ஏற்படுகிறது. இது புனிதமான ஒரு உணர்ச்சி: இது குழந்தைப் பிராயத்திலிருந்து வளர்கிறது. பகுத்தறிவு இயங்க ஆரம்பிக்கும் போது தீய செயல்கள் குறித்து வெட்கம் ஏற்படுகிறது. இந்த வெட்க மனப்பான்மையில் சிறிதளவு வேதனையும் கலந்திருக்கிறது. ''வெட்கம் என்பது இறை நம்பிக்கையில் ஒரு பிரிவு'' என்று பெருமானார் கூறியிருக்கிறார்கள். ''வெட்கமுள்ள கண்ணிய வானை இறைவன் விரும்புகிறான்!''

இந்த உணர்வு இல்லாதவர்கள் யாருக்கும் அஞ்ச மாட்டார்கள்; எந்தத் தவற்றையும் செய்யத் தயங்கமாட்டார் கள். மக்களின் கண்ணோட்டத்தைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை; மன்னனின் தண்டனையைப் பற்றி அவர்களுக்குச் சிந்தனையில்லை!

ஆனால் இந்த வெட்க உணர்வு சில வேளைகளில் முகஸ்துதியைத் தோற்றுவித்துவிடக் கூடும். இது உங்கள் கவனத்திற்குரிய பிரச்சினை.

8. உங்கள் தவறுகள் அம்பலமானால் மற்றவர்கள் உங்களைப் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறீர்களா? அப்படியானால் உங்கள் தவறுக்கு திரைபோட்டு மறை யுங்கள். மதத் தலைவர்கள், சட்ட நிபுணர்கள், மார்க்க ஞானிகள் முதலியோருக்கு இது போன்ற சூழல் சர்வ சாதாரணமானது! அவர்கள் எப்போதும் மற்றவர்களால் கண்காணிக்கப்படுகிறார்கள். ஆனால் பாமரர்களுக்கு இது போன்ற சூழல் ஏற்படுவதில்லை.

நாம் மக்களுக்கு மத்தியில் வாழ்கிறோம். எனவே அவர்களின் அன்பை நம்மால் புறக்கணித்து விட முடியாது. சமூக வளர்ச்சிக்கு இது முக்கியமான ஒன்று. ஆனால் மக்களின் அன்புக்காக-பாராட்டுக்காகச் சமூகத்தைக் கெடுக்கும் செயல்களைச் செய்யக் கூடாது என்பதே என் கருத்து. உண்மையில் நீங்கள் அறவழியில் பிரவேசித்து நடந்தால் மக்களின் அன்பு உங்களுக்குத் தானாகக் கிடைக்கும்.

8. ஒழுக்கமும், முகஸ்துதியும்

முகஸ்துதி ஏற்பட்டுவிடுமோ எனும் அச்சத்தினால் சிலர் ஒழுக்கத்தையே மறந்து விடுகிறார்கள். இதே காரணத்தை வைத்துக் கொண்டு நற்காரியங்களை எல்லாம் அவர்கள் புறக்கணிக்கிறார்கள். இது மிகப் பெரும் தவறு. முகஸ்துதியை ஒரே நேரத்தில் அழித்துவிட முடியாது. முகஸ்துதியைக் கட்டோடு அழித்தவர்கள் மக்கட்திரளில் மிகச் சிலர். எனவே முகஸ்துதிக்கு அஞ்சி நன்மைக்கு முற்றுப்புள்ளி வைப்பது அறிவுடைமையல்ல.

முகஸ்துதி ஒன்றையே காரணமாக வைத்து எந்தக் காரியத்தை விடலாம், எந்தக் காரியத்தை விடக் கூடாது என்பது பற்றி இப்போது நாம் ஆராய வேண்டும்.

நற்காரியங்களைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவற்றில் ஒன்று மனப்போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டது; மற்றொன்று பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது; இன்னொன்று மக்களின் நன்மையை அடிப்படையாகக் கொண்டது-இப்படி எத்தனையோ வகைகள்!

தொழுகை, நோன்பு, ஹஜ் முதலியவற்றை நாம் நற்காரியங்கள் என்று குறிப்பிடுகிறோம். இவை மனப்போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றில் ஈடுபடுவதற்கு முன்னால் இலேசாக முகஸ்துதி தோன்றும். அப்போது நீங்கள் பகுத்தறிவுடன் செயலாற்ற வேண்டும். மக்களின் கருத்தை விட இறைவனின் கருத்து மேலானது என்பதை நீங்கள் உணர்ந்து செயல்பட வேண்டும்.

செயலாற்றிக் கொண்டிருக்கும் போது இரண்டாம் தடவையாக முகஸ்துதி முளைவிடும். முகஸ்துதி தோன்று கிறது என்ற காரணத்தால் வணக்கத்தை விட்டு விடாதீர்கள். அது தோன்றத் தான் செய்யும். மன வலிமையுள்ளவர்கள் சிரமப்பட்டு அதை அடக்கலாம்.

அப்போது உங்கள் மனத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்: 'வெட்கங்கெட்ட மனமே! இறை வணக்கத்தில் மனிதர் களுக்கு இடம் கொடுக்கிறாயா?''

மனத்தை ஒருமுகப்படுத்துங்கள். உங்கள் அனுமதி யின்றி உங்கள் மனத்தில் எந்தச் சிந்தனையையும் நுழைய விடாதீர்கள். முகஸ்துதியைத் தவிர்ப்பதற்கு இது அருமை யானதொரு வழி. இந்த வழியில் சிரமம் ஏற்படத் தான் செய்யும். சிரமமில்லாமல் இந்தக் காரியத்தை எவராலும் சாதிக்க முடியாது.

மனத்தில் தோன்றும் தீய உணர்வு முதலில் வணக்கத் தையே ஆரம்பிக்க விடாது. அப்படி நீங்கள் ஆரம்பித்து விட்டாலும் அது இடையில் புகுந்து குறுக்கீடு செய்யும். இவற்றிற்கெல்லாம் இடம் கொடுத்து விடாதீர்கள். அப்படியும் நீங்கள் மனத்தை அடக்கியாண்டு விட்டால், விசித்திரமான ஓர் எண்ணம் உருவாகும். இது காரியம் முடிந்த பிறகு ஏற்படும் ஒன்று.

அப்போது உங்கள் மனம் உறுதியான குரலில் பேசும். அதன் பேச்சை உங்களால் அசட்டை செய்யவே முடியாது. ''இறைவனையா நீ வணங்குகிறாய்? இப்படியா வணங்கு வது? உன் வணக்கத்தில் கொஞ்சம்கூட ஒருமித்த மனநிலை இல்லையே! ஆரம்பத்திலிருந்து கடைசி வரை உன் மனம் ஏதேதோ எண்ணிக் கொண்டிருந்ததே மறந்து விட்டாயா?''

இது வன்மையான குற்றச் சாட்டு. ஆனால் அதைப் பொருட்படுத்தாதீர்கள். நீங்கள் எவ்வளவு சிறப்பாக நடந்து கொண்டாலும் அடிமனம் குற்றம் சாட்டத் தான் செய்யும். எனவே அதை மறந்து விட்டுச் செயலில் ஈடுபடுங்கள். முகஸ்துதியை எண்ணியும் பார்க்காதீர்கள். எடுத்த வேலையை ஒரு மித்த மனத்தோடு செய்து முடியுங்கள். அப்புறம் உங்களிடம் மருந்துக்கும் முகஸ்துதியைக் காண முடியாது.

மனத்தில் பதித்து வையுங்கள். நிலைமை எப்படி யிருந்தாலும் முகஸ்துதி தோன்றுகிறது என்ற ஒரே காரணத்திற்காக வேலையை விட்டு விடுவது குற்றம். இது அறியாமை மட்டுமல்ல. அசட்டைத் தனமும் கூட.

உங்கள் மனம் என்ன சொல்கிறது? ''நீ செய்யும் வேலையை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நீ இறைவனுக்காக வேலை செய்யவில்லை என்றும் மற்றவர் களின் நல்லெண்ணத்துக்காகவே வேலை செய்கிறாய் என்றும் எண்ணுகிறார்கள்!'' என்று கூறுகிறதா? அழுத்தமான அதன் குரல் உங்களைக் குழப்புகிறதா?

உணர்ச்சிக்கு அடிமைப்பட்டு விடாதீர்கள். அப்புறம் உங்களிடம் எந்தச் சிறப்பும் இருக்காது. உங்கள் செயலில் உயிர் இருக்காது. உங்கள் சிந்தனையில் தெளிவு இருக்காது.

மக்கள் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்களா? இருக்கட்டுமே! அதனால் உங்களுக்கு என்ன நஷ்டம்? உங்கள் வணக்கத்தை அவர்கள் பார்க்கக் கூடாது என்று ஏதேனும் சட்டம் இருக்கிறதா? கண்ணியமுள்ள ஒவ்வொரு மனிதனின் செயலையும் மக்கள் எப்போதும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

அவர்கள் உங்களை முகஸ்துதிக்காரன் என்று தானே எண்ணுகிறார்கள்? தாராளமாக எண்ணட்டும். உங்களுக்குத் தண்டனை கொடுப்பதும் பரிசு வழங்குவதும் இறைவன், எனவே அவனைத் தவிர்த்து மற்றவர்களுக்கு நீங்கள் ஏன் அஞ்சவேண்டும்? அவர்களின் கருத்துக்காக உங்கள் வேலையை விட்டு விட்டால் நீங்கள் மிகப்பெரும் முகஸ்துதிக்காரர். இதை நீங்கள் மறந்து விடக் கூடாது. அடிமனத்தின் குரலுக்கு மானிடர்களில் பலர் தலைவணங்குகிறார்கள். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், இந்த உண்மையை நம்மால் மறுக்க முடியாது; ஏற்றுக் கொள்ள வேண்டியதாகத் தான் இருக்கிறது.

மக்களின் பாராட்டுக்காக நன்மை செய்வது, அவர்களின் நிந்தனைக்காகத் தீமையை விடுவது, முகஸ்துதிக்காரன் என்னும் பெயரைத் தவிர்ப்பதற்காக வேலையைத் துறப்பது- இவை அனைத்தும் ஒரே தரத்தவை. இவற்றிற்கிடையில் அப்படியொன்றும் வேற்றுமை கிடையாது.

எனவே நீங்கள் முதலில் முகஸ்துதியால் ஏற்படும் விளைவுகளை எண்ணிப் பாருங்கள். அப்புறம் அதைக் கட்டோடு மறந்து விட்டு வேலையைச் செய்யுங்கள். உங்கள் நேரம் முழுவதையும் ஒருமித்த மனத்தோடு ஆக்க வேலைக்குச் செலவிட்டால் அப்புறம் முகஸ்துதி உங்களை ஒன்றும் செய்து விடாது. உங்கள் செயல் திறனுக்கு முன்னால் அது செயலற்றுப் போய்விடும். இது தான் முகஸ்துதியை அழிப்பதற்குரிய எளிய வழி. இதை விட்டால் வேறு வழியில்லை. திருக்குர்ஆனின் கருத்துக்களை அப்படியே பின்பற்றுங்கள். மன உணர்ச்சிக்கு இடம் கொடுக்காதீர்கள். இது வெற்றிக்குரிய வழி.

பிரபலம் ஏற்பட்டு விடுமோ எனும் அச்சத்தினால் சிலர் நற்காரியங்களை விட்டிருக்கிறார்கள். இத்தகையவர்களைப்

பற்றி நாம் வரலாற்று ஏடுகளில் நிறையப் பார்த்திருக்கிறோம். அவர்கள் உண்மையில் சிறப்புள்ளவர்கள்; தெளிந்த சிந்தனைக்கும் எதிர்காலத்தை ஊடுருவிப் பார்க்கும் கண்ணோட்டத்திற்கும் இவர்கள் பெயர் பெற்றவர்கள். என்றாலும் அவர்கள் பிரபலத்தை-பிரச்சாரத்தை விரும்பவில்லை. எனவே அவர்கள் சில வேளைகளில் நற்காரியங்களை விட்டிருக்கிறார்கள்.

ஒருசமயம் திருக்குர்ஆன் ஓதிக்கொண்டிருந்த இப்றாஹீம் நகயீ எனும் அறிஞர் யாரோ ஒருவர் வந்ததைக் கண்டதும் திருக்குர் ஆனை மூடி வைத்து விட்டாராம். ''இவர் எப்போதும் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருக்கிறார்'' என்னும் பிரச்சாரம் ஏற்பட்டு விடுமல்லவா?

இப்படி யார் நினைத்தாலும் யார் நினைக்காவிட்டாலும், வந்த மனிதர் நினைக்கக் கூடும், ''அந்த மனிதர் அப்படி நினைத்துக் கொள்ளப் போகிறாரே என்று தான் நான் திருக்குர்ஆனை மூடி வைத்தேன்'' என்று இப்றாஹீம் நகயீயே விளக்கம் கொடுத்தார்.

இப்றாஹீம் தைமீ என்பவர் கூறுகிறார் : ''உங்கள் உரையாடல் ஆச்சரியத்தை ஏற்படுத்தினால் உடனே உரையாடலை நிறுத்திவிடுங்கள்; உங்கள் மௌனம் ஆச்சரியத்தை ஏற்படுத்தினால் உடனே பேசுங்கள்!'' முன்னோரில் பலர் இறைஞானத்தில் கட்டுண்டு பொங்கியழ நினைத்த போதெல்லாம், பிரச்சாரம் ஏற்பட்டுவிடும் எனும் அச்சத்தால் அழுகையைச் சிரிப்பாக மாற்றியிருக்கிறார்கள். இதுபோன்ற வரலாற்றுக் குறிப்புகள் எண்ணற்றவை.

இவற்றிற் கெல்லாம் காரணம் இது தான்: அவர்கள் பிரச்சாரத்தை வெறுத்தார்கள். எனவே இவற்றை முகஸ்துதி என்று எந்தக் கோணத்திலிருந்தும் சொல்ல முடியாது.

அவர்கள் முழுமையான பக்தியும் குறைவற்ற சிந்தனையும் பெற்றவர்கள். அவர்களின் வணக்கத்தில் ஒருமைப் பாட்டுக்குப் பஞ்சமில்லை. என்றாலும் தம்மைப் பற்றிப் பிரச்சாரத்தை விரும்பாததால் அவர்கள் அப்படி நடந்திருக் கிறார்கள். அவ்வளவு தான்.

ஒரு செயலில் இறைவனைப் பற்றிய எண்ணம் அறவேயில்லை என்றால், முகஸ்துதியின் அடிப்படையி லேயே அது தூண்டிவிடப்பட்டிருக்கிறது என்றால்-அது எவ்வளவு சிறந்த செயலானாலும் நன்மையில்லை. இதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. மேற் குறிப்பிட்டவர்கள் இதற்கு முற்றிலும் மாறுபட்டவர்கள்; எனவே அவர்களின் செயலை வைத்து-சொல்லை வைத்து முரண் வழிக்கு ஆதாரம் தேடுவது சரியல்ல.

தவிர, இப்றாஹீம் நகயீயின் செயலுக்கு நம்மால் மற்றொரு காரணமும் காட்ட முடியும். யாரோ ஒருவர் வந்ததும் தம்முடைய வேலையை இப்றாஹீம் நிறுத்தி விட்டார்; குர்ஆனை மூடி வைத்து விட்டார் அல்லவா? வந்தவரிடம் நன்றாக உரையாடும் எண்ணத்துடன் அவர் அப்படிச் செய்திருக்க முடியாதா? வந்தவர்களிடம் இனிமையாக உரையாடுவது இஸ்லாம் போதிக்கும் பண்புகளில் ஒன்றாயிற்றே! அல்லது, இப்றாஹீம் ஓதுவதை நிறுத்தும் நேரத்தில் அந்த மனிதர் அங்கு வந்திருக்க முடியுமல்லவா?

உங்கள் சிந்தனைக்கு இவ்வளவு போதும் என்றே நான் நினைக்கிறேன். மக்களின் கருத்துக் குறித்து அஞ்சிக் கொண்டு நற்காரியத்தை விடுவது தவறு என்று நான் மேலே குறிப்பிட்டதற்கு இது எந்த விதத்திலும் முரணல்ல.

வணக்கத்திற்கு அடுத்தபடியாக பதவியும் அதிகாரமும் மக்களின் கண்ணியத்தைப் பெறுகின்றன. இவற்றைப்

பெற்றவர்கள் நீதிக்கும் நேர்மைக்கும் மதிப்புக் கொடுத்து நடந்தால் அவற்றை வணக்கங்கள் என்றும் குறிப்பிடலாம். ஏனெனில் அரசாங்க அலுவல்களில் பதவி வகிப்பவர்களும் அதிகாரத்தைக் கையில் பிடித்திருப்பவர்களும் தினம் எத்தனையோ சிக்கல்களைச் சமாளிக்க வேண்டியுள்ளது. மற்றவர்களின் நல்வாழ்வுக்காக அரசாங்க அதிகாரிகள் தம்மைத் தாமே அர்ப்பணித்துக் கொள்கிறார்கள். எனவே அதிகாரிகளின் சிறப்பு பெருகுகிறது.

''நேர்மையுள்ள அரசாங்க அதிகாரியின் ஒருநாள் வேலை மற்றவர்களின் அறுபது ஆண்டு வணக்கத்திற்குச் சமமானது!'' என்று பெருமானார் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

''மறுமையில் என் அன்பிற்குரியவர்களில் அதிகாரிகள் ஒரு சாரார்!'' என்பது பெருமானாரிடமிருந்தும் நமக்குக் கிடைத்திருக்கும் மற்றொரு முத்து.

ஆனால் அதிகாரத்தைக் கையில் ஏந்தும் போது ஏற்படும் விபரீதங்களையும் நம்மால் மறுக்க முடியாது. அது எத்தனையோ ஊழல்களையும் அநீதிகளையும் நாட்டில் உருவாக்கிவிடும். எனவே தான் உண்மையான இறை பக்தர்கள் அதிகாரத்தையும் அதிகாரிகளையும் வெறுத்தார் கள். பதவியும் அதிகாரமும் காலடியில் கிடந்த போது அவர்கள் எட்டி உதைத்தார்கள். இதற்கு ஆதாரமாகச் சரித்திர நூல்கள் அத்தனையும் நம்மிடம் பேசுகின்றன.

அதிகாரம் என்பது மகத்தானதொரு பொறுப்பு. இந்தப் பொறுப்பை வகிப்பவர்கள் குணத்திலும் செயலிலும் தங்கமாக இருக்க வேண்டும். உணர்ச்சி வசப்படுகிறவர் களும் சுயநலமிகளும் இதற்குத் தகுதியில்லை. அவர்களிடம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டால் நாட்டில் அமைதி

இருக்காது; புரட்சி தாண்டவமாடும். செல்வம் கொழிக்காது; வறுமை வாட்டிப் பிழியும். வரலாறுகளைப் படித்துப் பாருங்கள்-இதிலுள்ள உண்மை தெரியும்.

மற்றத் துறைகளில் ஈடுபட்டிருப்பவர்களை விட அரசியலில் பதவி வகிப்பவர்களை விரைவாக முகஸ்துதி அண்டிவிடுகிறது. அதன்பிறகு அவர்கள் துணிந்து செய்யும் அட்டூழியங்களுக்கு அளவு இருக்காது. அப்போது அவர்கள் செய்யும் ஒரு நாள் வேலை, மற்றவர்கள் அறுபது ஆண்டுகள் செய்யும் குற்றங்களுக்குச் சமமாகிவிடும்.

இதனால் தான் உமர் (ரலி) ஜனாதிபதிப் பதவியைக் குறிப்பிட்டு இப்படிக் கூறினார்கள்: ''அதில் இருக்கும் ஆபத்துகளோடு அதை யார் ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள்!''

பெருமானார் நபித்தோழர் ஒருவருக்குக் கூறினார்கள்; ''அப்துர் ரஹ்மான்! பதவியைக் கேட்காதீர். அது தானாக வந்தால் ஏற்றுக் கொள்ளும்; அப்போது உம்மால் அடக்கியாள முடியும். பதவிக்கு ஆசைப்படாதீர்; அப்புறம் அதில் நீர் சிக்கிக் கொள்வீர்!''

அபூபக்ர் (ரலி) அவர்கள் முஸ்லிம் பெருங்குடி மக்களின் தலைமைப் பதவியை ஏற்றபோது ராபிவு பின் உமர் என்ற நண்பர் ஒரு வினாவை வீசினார். ''இப்போது நீங்கள் பதவியை ஏற்றுக் கொண்டு விட்டீர்களா! ஆச்சரியமாக இருக்கிறதே. பதவியை ஏற்க வேண்டாம் என்று என்னிடம் நீங்கள் ஒரு காலத்தில் சொன்னதை மறந்து விட்டீர்களா?''

'கலீபா'வின் விடை : ''இல்லை-நான் மறக்கவில்லை. உம்மிடம் நான் அப்படிக் கூறியதற்குக் காரணமுண்டு. நேர்மையற்றவர்கள் அதிகாரத்தில் உட்காரும் போது அவர்கள் இறைவனின் சினத்திற்கு இலக்காகிறார்கள்....''

இந்தக் கட்டத்தில் ஒரு செய்தியை நீங்கள் மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். பெருமானாரின் கருத்துக்கள் சில அதிகாரத்தை வரவேற்கின்றன; வேறு சில எதிர்க்கின்றன. தெளிவான சிந்தனையற்றவர்கள் முன்னுக்குப் பின் முரண் இருப்பதாக எண்ணக் கூடும். இது தவறு. நிச்சயமாக முரண்பாடு கிடையாது. அது பெருமானாரின் கருத்துக்களில் என்றைக்கும் காண முடியாத ஒன்று.

ஆழமான மனப் பண்பும் எதற்கும் அசையாத இறை நம்பிக்கையும் பெற்றவர்கள் மிகச் சிலர். தம்மைப் பொறுத்த வரையில் மட்டுமன்றி, நாட்டின் முன்னேற்றத்தைப் பொறுத்தவரையிலும் அவர்கள் திறமைசாலிகள். அவர்களையே பெருமானார், 'பதவிக்குத் தகுந்தவர்கள்' என்று குறிப்பிடுகிறார்கள். பதவியை ஆதரித்துக் கூறப்பட்ட கருத்துக்கள் அத்தனையும் இவர்களைப் பொறுத்தவை.

ஆனால் இந்தப் பொறுப்பைச் சபல எண்ணம் படைத்தவர்களும் நிர்வாகம் செய்யத் தெரியாதவர்களும் ஏற்கக் கூடாது. இந்தப் பிரிவினரைப் பெருமானார் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். பதவியை எதிர்த்துக் கூறப்பட்ட கருத்துக்கள் அத்தனையும் இவர்களைப் பொறுத்தவை.

மேடை ஏறிப் பிரச்சாரம் செய்வது, மார்க்கத் தீர்ப்பு வழங்குவது, கல்லூரியில் நின்று விரிவுரை நிகழ்த்துவது முதலியவற்றையும் இந்த பிரிவில் தான் சேர்க்க வேண்டும். இவற்றிலுள்ள எண்ணற்ற நற்பயன்களை நம்மால் மறுக்க முடியாதது போல் இவற்றால் ஏற்படும் தீய விளைவுகளையும் நம்மால் மறுக்க முடியாது. இந்தப் பதவிகளில் இருப்பவர்கள் தம் ஆற்றல்களைத் தப்பான வழியில் பிரயோகிக்கும் போது அவர்களிடம் தோன்றும் தீய உணர்வுகளையும் தீய செயல்களையும் எண்ணிப் பார்க்க முடியாது.

மேடையில் நின்று பிரச்சாரம் செய்கிறவர்கள் புனிதமான லட்சியத்தை மனத்தில் கொண்டிருக்க வேண்டும். குழம்பித் தவிக்கும் மக்களுக்கு அறவழியை விளக்கிக் காட்ட வேண்டும். சிந்தனையற்ற மக்களுக்குச் சிந்திப்பது எப்படி என்று சொல்லிக் கொடுக்க வேண்டும். காலத்தால் மாறாத தத்துவங்கள், கலக்கத்தில் பயன்படும் வரலாறுகள், கலங்கரை விளக்கம் போன்ற பொன்மொழிகள் அனைத்தையும் அவர்கள் எடுத்துரைக்க வேண்டும். ஆனால் அவர்கள் தம் பேச்சுக்கிடையில் தம்மைப் பற்றிய எண்ணத்தை மக்களின் மனத்தில் திணிக்க முற்படக்கூடாது.

நாம் கொஞ்சம் கண்ணைத் திறந்து பார்த்தால் நிலைமை நேர்மாற்றமாக இருப்பதை உணர்கிறோம். தற்போதைய பேச்சாளர்களிடம் இதுபோன்ற குறிக்கோள் இருப்பதில்லை. பதவிக்காக, கண்ணியத்துக்காக அவர்கள் பேசுகிறார்கள். உண்மையை எடுத்துரைப்பதற்குப் பதிலாக உண்மைக்கு மாறுபட்டதைக் கற்பனையின் துணை கொண்டு உண்மையாகக் காட்டுகிறார்கள். அவர்கள் தத்துவ விளக்கம் கொடுப்பதில்லை; தத்தி நடக்கும் குழந்தைகளுக்குக் கதை சொல்கிறார்கள்.

பேச்சுக்கிடையில் அவர்கள் மக்களின் கவனத்தையும் கண்ணியத்தையும் தம் பக்கம் திருப்ப முயற்சி செய்கிறார்கள். இன்னும் எத்தனையோ தவறுகளை அவர்கள் செய்கிறார்கள்.

இந்தத் தவறுகள் தவிர்க்க முடியாதவையல்ல. இவற்றைத் தடை செய்து விடலாம். ஆனால் அதை அவர்கள் விரும்ப வேண்டுமே! பெருமானாரையும் நபித் தோழர்களையும் அவர்கள் பின்பற்றிச் செயலாற்றினால் தீமைகளுக்குப் பதில் நன்மைகள் விளையும்; புரட்சிக்குப் பதில் அமைதி உருவாகும். குழப்பத்தின் இடத்தில் தெளிவு துளிர்விடும்.

ஆனால் பெருமானாரின் வழியைப் பின்பற்றும் போது சில வேளைகளில் மக்களின் வெறுப்பை வாரிக் கட்ட வேண்டியிருக்கும். அவர்கள் அனைவரும் சேர்ந்து உங்களை இகழ்வார்கள். ஏனெனில் அடிப்படையான உண்மைகளைப் பெரும்பாலோர் இன்னும் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். அவற்றிற்கு நேர் எதிரான கருத்துக்களை அவர்கள் மனத்தில் வைத்திருப்பதால், ஆராய்ச்சியின் முடிவில் நீங்கள் கூறும் உண்மைகளை மறுக்கிறார்கள்; உங்களை வெறுக்கிறார்கள்.

பெருமானாரைப் பின்பற்றி மேடை ஏறிப் பேசுகிறவர்கள் அனைவருக்கும் இது தவிர்க்க முடியாத ஒரு சூழல். ஏனெனில் இது போன்ற சூழலில் பெருமானாரே சிக்கியிருக்கிறார்கள்.

பேச்சாளர்கள் இதை விரும்பாததால் தம் பேச்சின் திசையையே வேறொரு கோணத்திற்குத் திருப்பி விடுகிறார்கள். மக்கள் விரும்பும் கதைகளையும் வேடிக்கைச் சம்பவங்களையும் விளக்குகிறார்கள். மக்கள் விரும்பாத உண்மைகளுக்குத் திரை போடுகிறார்கள். மார்க்கத்தையும் அரசியலையும் தனித் தனியே பிரிக்கிறார்கள்.

இவர்களைப் போன்றவர்களே மார்க்கத் தீர்ப்பு-'பத்வா' கொடுப்பவர்கள். இந்தப் பொறுப்பை ஏற்றவர்கள் இஸ்லாமிய ஆட்சி ஓங்கி நின்ற போது மிக அதிகமாக இருந்தார்கள். பொது மக்களால் அவர்கள் பெரிதும் உயர்த்திக் கணிக்கப்பட்டார்கள். அவர்களின் கருத்துக்களை-சுய நலத்தின் அடிப்படையில் வெளியிடப்பட்ட கருத்துக்களை மக்கள் வேத வாக்குகளுக்கு நிகராக மதித்தார்கள்.

இதனால் வரலாற்றில் ஏற்பட்டிருக்கும் கறை எப்போதும் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது. எத்தனையோ உண்மைகள்

மூடி மறைக்கப்பட்டன. அர்த்தமில்லாத விவரங்கள்- சிந்தனையற்ற தீர்ப்புகள் 'பத்வா' வின் உருவில் நாடெங்கும் பரவின. எத்தனையோ அறிஞர்களை 'பத்வா' நாடு கடத்தியிருக்கிறது. எத்தனையோ குற்றவாளிகளை அது நிரபராதிகளாக்கியிருக்கிறது.

கல்லூரி விரிவுரையாளர்களிடமும் இந்தக் குறையை நாம் பார்க்க முடியும். யாரோ எழுதிய ஒரு நூலுக்கு விரிவுரை கொடுக்க வேண்டிய அவர்கள் தம் கருத்தை மாணவர்களின் மனத்தில் ஆழமாகப் பதித்து விடுகிறார்கள்.

சிந்தித்துப் பாருங்கள். இந்த மூன்று பதவிகளும் எப்படி முகஸ்துதிக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்ற உண்மை யை உங்களால் தெளிவாக உணரமுடியும்.

நீங்கள் இப்படிக் கேட்கலாம்: அறிவு என்பது சிறப்பு மிக்கது. அறிவு பெற்றவர்களே இந்தப் பதவிகளில் இருக்கிறார்கள். பிரச்சாரத்திற்குப் பெருமனாரே நிறைந்த ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். ''உங்கள் பேச்சினால் ஒரு மனிதன் அறவழிக்கு வந்துவிட்டால், அது உலகிலுள்ள செல்வங்கள் அனைத்தையும் விடச் சிறந்தது!'' என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே பிரச்சாரத்தை நீங்கள் மறுப்பது முறையற்ற ஒன்று. உங்கள் வாதத்திற்கு ஆதாரம் காட்ட முடியுமா?

- இப்படி நீங்கள் கேட்கலாம். ஆனால் நான் மேலே கூறியது சுத்தமான உண்மை. அதில் குழப்பத்திற்கோ சந்தேகத்திற்கோ இடமில்லை. பெருமனாரின் கருத்தையோ அறிவின் குறிப்பையோ நான் மறுக்கவில்லை. அறிவு, நீங்கள் குறிப்பிட்டது போல், என்றைக்கும் சிறப்புள்ளது தான். எந்த மனிதனைப் பார்த்தும் ''அறிவுக்கு முயற்சி செய்யாதே'' என்று நம்மால் கூற முடியாது. ஏனெனில் அறிவின் சிறப்பு மிக உயர்ந்தது.

ஆனால் அறிவு பெற்றவர்களிடமிருந்துதான் ஆபத்து உருவாகிறது. அவர்கள் தம் அறிவை மேடையிலும் கல்லூரியிலும் தீர்ப்புக் காகிதத்திலும் வெளியிடும் போது எத்தனையோ ஆபத்துகள் ஏற்படுகின்றன; முகஸ்துதியும் தற்புகழ்ச்சியும் தாமே உருவாகின்றன. அறிஞர் ஒருவர் சிறிதும் முகஸ்துதி இல்லாத நிலையில், கலப்பற்ற நல்லெண்ணத்துடன் மேடை ஏறினால் அவர் உண்மையில் பாராட்டுக்குரியவர். இத்தகையவகைளைத்தான் மேற்குறிப் பிட்ட பெருமனாரின் கருத்து சுட்டிக் காட்டுகிறது. பெருமனா ரின் கருத்தை எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகக் கருதுவது அறியாமை.

சுருங்கச் சொன்னால், மக்களின் கண்ணியத்திற்கும் விருப்பத்திற்கும் இலக்கான எல்லாப் பொறுப்புகளிலும் ஆபத்து உண்டு. ஆபத்து ஏற்படாதவாறு பொறுப்பு வகிப்பது ஆழ்ந்த திறமையின் அடிப்படையில் உருவாகும் ஒன்று. திறமைசாலிகள் மட்டுமே அவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். திறமையற்றவர்களிடம் பொறுப்பை ஒப்படைத் தால் கண்டிப்பாய் விபரீதம் ஏறுபடும்.

உங்களிடம் இப்படி ஏதேனும் ஒரு பொறுப்பு வந்தால் உதறித் தள்ளிவிடாதீர்கள். அதிலுள்ள சாத்திய - அசாத்தி யங்களை, நன்மை தீமைகளை எடைபோட்டுப் பாருங்கள். ஊழல் இல்லாமல் செயலாற்ற முற்படுங்கள். அப்படியும் உங்களால் செயலாற்ற முடியவில்லை என்றால், உங்கள் பொறுப்பை உங்களைவிடத் திறமை மிக்கவர் களிடம் விட்டு விடுங்கள்.

பேச்சாளர்களின் மனநிலையைக் கண்டு பிடிப்பது எப்படி என்பது மற்றொரு பிரச்சினை. இதற்கு மூன்று வழிகள் இருக்கின்றன. பேச்சாளன் தன்னை விடச் சிறந்த பேச்சாள னைப் பார்த்துப் பொறாமைப்படக் கூடாது. இது முகஸ்துதிக்கு அறிகுறி. அறிவுத்துறையில் முன்னேறு

வதற்கு இந்த உணர்ச்சி தேவைதான். ஆனால் மற்றவனின் அறிவைவிட அதிகமாக அறிவு பெற முயற்சி செய்ய வேண்டுமே தவிர, பொறாமைப்படக் கூடாது- இது முதல் அறிகுறி.

தன்னைவிடப் பெரியவன் வரும்போது பேச்சாளனின் பேச்சிலும் சிந்தனையிலும் கலக்கம் ஏற்படக் கூடாது. இது இரண்டாம் அறிகுறி.

மக்கள் அனைவரும் தன்னையே பின்பற்ற வேண்டும் என்றும் தான் காட்டும் வழியில் அவர்கள் கண்ணை மூடிக் கொண்டு நடக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கக் கூடாது. இது மூன்றாம் அறிகுறி. இந்த மூன்று அறிகுறிகளையும் வைத்துப் பேச்சாளர்களைச் சரியாக எடைபோட்டு விடலாம். இந்த மூன்றையும் தவிர்த்து இன்னும் எத்தனையோ அறிகுறிகள் இருக்கின்றன. அவை அனைத்தையும் இங்கு எழுதுவது அசாத்தியம். என்றாலும் இந்த மூன்றின் உதவிகொண்டு உங்களால் மற்றவர்களை எடைபோட முடியும்; அவசியமேற் பட்டால், உங்களை நீங்களே எடைபோட்டுப் பார்த்துக் கொள்ளலாம்.

இந்த அறிகுறிகளை விளக்குவது போல் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. ஒரு நாள் ஹஸன் பஸ்ரீ தம் சகாக்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராத விதமாக ஹஜ்ஜாஜ் பின் யூசுப் தம் அதிகாரிகளுடன் பள்ளிக்கு வந்தார்; நாலாபுறமும் திரும்பிப் பார்த்தார். கடைசியில் ஹஸனின் குழுவுக்கு வந்தார். ஹஸன் சற்று நகர்ந்து ஆளுநருக்கு இடம் கொடுத்தார். ஆளுநர் ஹஜ்ஜாஜுக்கு மறுபுறத்தில் சயீத் உட்கார்ந்திருந்தார்.

ஆனால் ஹஸன் தம் பேச்சை மாற்றவுமில்லை; திருத்தவுமில்லை; தம் போக்கிலேயே அவர் பேசிக் கொண்டிருந்தார்.

எதிர்பாராத இந்தச் சூழ்லை சயீத் ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். அவர் ஹஸன் பஸ்ரீயையும் அவரது விளக்கத்தையும் ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தார்.

ஆனால் ஹஸன் என்றும் போல் அன்றும் உரையாடிக் கொண்டிருந்தார். தம் அருகில் ஹஜ்ஜாஜ் உட்கார்ந்திருப்பது குறித்து அவரது சிந்தனையிலோ பேச்சிலோ எத்தகைய மாற்றமும் தோன்றவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு பேச்சு முடிவடைந்தது. ஹஜ்ஜாஜ் ஹஸன் பஸ்ரீயின் தோளில் மெதுவாகத் தட்டினார் - பாராட்டுவது போல்! "உங்கள் பேச்சு உண்மையானது. இது போன்ற அரங்கங்களை நீங்கள் எப்போதும் தொடர்ந்து நடத்த வேண்டும். ஏனெனில், 'அறிவுப் பிரச்சாரம் செய்யும் இடம் சொர்க்கத்துப் பூங்கா போன்றது!' என்று பெருமனார் கூறியிருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன்!"

- இது ஹஸன் பஸ்ரீயின் மனப் பக்குவத்தைக் காட்டும் ஒரு சம்பவத் துணுக்கு. அவர் நல்ல பேச்சாளர்; அதே சமயத்தில் முகஸ்துதியற்றவர்.

இது போன்ற சம்பவங்களைச் சரித்திரத்தில்ஏராளமாகக் காணலாம். சிரமத்தைப் பொருட்படுத்தாமல் அவற்றைப் படித்துப் பாருங்கள். நமது முன்னோரின் வாழ்விலும் வாக்கிலும் முகஸ்துதி எப்படி வெறுக்கப் பட்டிருந்தது என்று தெரியும். ஆனால் அந்தப் பொற்காலம் மாறிப் போய் விட்டது. அதன் உயிர்ச்சின்னமாக விளங்கும் நற்செயல் களை இன்றைக்குத் தேடிப் பார்த்துத் தான் கண்டு பிடிக்க வேண்டி யிருக்கிறது. அப்போது எங்கும் காணப்பட்ட நன்மைகளை இப்போது நம்மால் எங்குமே காண முடியவில்லை!

9. ஒழுக்கமும், சூழ்நிலையும்

சூழ்நிலை சக்தி வாய்ந்த ஒன்று என்று உங்களுக்குத் தெரியும். மனிதனின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் சூழ்நிலையே அடிப்படைக் காரணம். சில வேளைகளில் சூழ்நிலை தீமைகளை உருவாக்குவது போல், வேறுசில வேளைகளில் அது நன்மைகளையும் உருவாக்குகிறது. கெட்டவர்களுக்கு மத்தியில் நல்லவன் கெட்டவனாக மாறுவது போல், நல்லவர்களுக்கு மத்தியில் கெட்டவன் நல்லவனாக மாறுகிறான்.

சில வேளைகளில் சில நண்பர்கள் ஒன்று சேர்ந்து இரவு நேர வணக்கத்தில் ஈடுபடுவதுண்டு. இந்த சூழலின் தூண்டுதலால் ஒருவன் வெகுநேரம் இறைவணக்கம் புரிகிறான். அவன் தணித்து விடப்பட்டால் இவ்வளவு நேரம் இறைவணக்கம் புரிய மாட்டான். மற்றவர்களின் உற்சாகத்தையும் வேகத்தையும் பார்க்கும் போது அவன் தன்னையே மறந்து விடுகிறான். வழக்கத்திற்கு மாற்றமாக நீண்ட நேர வணக்கம் புரிகிறான்.

இது தொழுகைக்கு மட்டும் சொந்தமானதல்ல. சில வேளைகளில் இதுபோன்ற சூழல்களில் நோன்பு, தர்மம் முதலியவையும் சிறப்பாக உருப் பெறுகின்றன.

இப்படிச் சூழ்நிலையின் சக்தியால் உருவாக்கப்படும் நற்செயல் குறித்து அறிஞர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ''இது நிச்சயமாக முகஸ்துதியாகும். இந்த வணக்கத்திற்கு மதிப்பில்லை. அதைவிட்டு விலகுவது கடமை!'' என்று அவர்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் கொடுத்திருக்கும் தீர்ப்பு நேர்மையானதல்ல என்பது என் கருத்து. இந்தப் பிரச்சினையை இவ்வளவு விரைவாகத் தீர்மானிப்பது அறியாமை. பொதுப் படையாகச் சொன்னால் அவர்களின் தீர்ப்பு முரணானது என்றே கொள்ள வேண்டியிருக்கிறது. இதைக் கொஞ்சம் விரிவாக நாம் ஆராயவேண்டும்.

நற்காரியங்களில் ஆழமான வெறுப்பும் நீதி நடவடிக்கைகளில் நீங்காத வேதனையும் பெற்றவர்கள் சிலர். இவர்கள் என்றைக்கும் தாமாக நற்காரியம் செய்யமாட்டார்கள். நாலுபேருடைய பாராட்டுக்காகவோ, சூழ்நிலையின் சக்திக்காகவோ இவர்கள் நற்காரியம் செய்தால் அது நிச்சயமாக முகஸ்துதி தான். இதில் சந்தேகமில்லை. இந்தப் பிரச்சினையில் நமக்கும் மேற்குறிப்பிட்ட அறிஞர்களுக்கும் இடையில் நிச்சயமாகக் கருத்து வேற்றுமை கிடையாது. இவர்கள் ஒரு சாரார்.

இவர்களுக்கு முற்றிலும் மாறுபட்டவர்கள் மற்றொரு சாரார். அவர்கள் மார்க்கத்தின் நடவடிக்கைகளில் நீங்காத பற்றுதலும் நீதிநெறியில் ஆழமான அன்பும் கொண்டவர்கள். இறைவணக்கத்தையும் இதர நற்காரியங்களையும் அவர்கள் என்றைக்கும் வெறுத்ததில்லை.

என்றாலும் நினைத்த மாத்திரத்தில் செயலாற்ற முடியாத படி அவர்களுக்குச் சில தடைகள் இருக்கின்றன. வீட்டு வேலைகளைக் கவனிப்பது வர்த்தகங்களை நிர்வகிப்பது முதலான பல வேலைகளால் அவர்களின் நல்லெண்ணம் தடைசெய்யப்படுகிறது. அவர்கள் புதியதொரு சூழலில் பிரவேசிக்கும் போது, நீதிநெறியில் பற்றுதல் கொண்ட நண்பர்களுக்கு மத்தியில் இருக்கும் போது அந்த இயற்கையான நல்லெண்ணம் தூண்டி விடப்படுகிறது. எனவே அவர்கள் செயலாற்றுகிறார்கள்.

இந்த வணக்கத்திற்கு மேற்குறிப்பிட்ட அறிஞர்களின் தீர்ப்பு பொருந்தாது.

இது போன்ற அனுபவங்கள் சாதாரணமாக எல்லோருக்கும் ஏற்படுவதுண்டு. நீங்கள் வீட்டில் இருக்கும் போது எந்த உணர்வு உங்கள் மனத்திலிருக்கிறதோ அந்த உணர்வு நீங்கள் பள்ளியில் இருக்கும் போது இருப்பதில்லை. ஆனால் பள்ளியில் நீங்கள் பெறும் உணர்வை உங்கள் நண்பனின் வீட்டில் பெறலாம். ஏனெனில் அங்கு உங்கள் சிந்தனையைத் திருப்பக் கூடிய எதுவும் கிடையாது. எனவே இயற்கையான உணர்வு உங்களிடம் தோன்றுகிறது. இதை முகஸ்துதி என்று எப்படிக் கூற முடியும்? அப்படிக் கூறுகிறவர்கள் தான் இதற்கு விளக்கம் கொடுக்க வேண்டும்.

இடம் மாறும் போது மனப்பான்மை மாறுகிறது. இது உண்மை . புதிய இடத்திற்குப் போகும் சிலர் இரவு முழுவதும் தூக்கமில்லாமல் புரண்டு கொண்டிருப்பதை நீங்கள் கண்டதில்லையா? எனவே நல்ல மனம் படைத்தவர்கள் சூழ்நிலையின் தூண்டுதலால் நன்மை செய்வது வரவேற்கத் தக்கது; அது முகஸ்துதியல்ல. ஏனெனில் இறையச்சத்தால் பொங்கியழும் சிலரை நீங்கள் பார்க்கும் போது உங்களுக்கும் இறையச்சம் ஏற்பட்டுவிடக் கூடும்; அவர்களைப் போல் நீங்களும் அழக்கூடும்.

ஆனால் உற்றார் உறவினர் ஒப்பாரி வைப்பதால் சிரமப்பட்டு அழுகையை வரவழைக்க முயற்சி செய்கிறார்கள் சிலர். இது நிச்சயமாக முகஸ்துதிதான். எனவே இதுபோன்ற நடிப்புகள் உண்மை முஸ்லிம்களுக்குத் தேவையில்லை.

உங்கள் மனம் தெளிவாக இருந்தால் உங்கள் செயலில் முகஸ்துதி தோன்ற முடியாது. ''உன் உள்ளம் இருளடைந்து

கிடக்கும் போது, உன்னை இறைபக்தியுள்ளவனாக, இறையச்சம் கொண்டவனாக மக்களுக்குக் காட்டாதே!'' என்று அறிஞர் லுக்மான் தம் மைந்தனுக்குக் கூறினார்.

முகஸ்துதி என்பது விளக்கத்திற்கு அப்பாற்பட்ட ஒன்று. அது எப்போது -எப்படி - எந்தச் செயலில் உருவாகும் என்று வரையறுத்துக் கூற முடியாது. முகஸ்துதி என்பது மனத்தில் ஒன்றை வைத்துக் கொண்டு, சொல்லாலோ செயலாலோ அதற்கு மாற்றமான ஒன்றை வெளியிடுவது. இது பகிரங்கமானால் மக்களின் வெறுப்புக்கு இலக்காக வேண்டி ஏற்படும். மக்களில் பலர் ஒரே பார்வையில் முகஸ்துதியைக் கண்டு பிடிக்கும் அளவுக்குத் திறமையுள்ள வர்களாக இருக்கிறார்கள். இதனால் முகஸ்துதி செய்கிற வர்கள் சில வேளைகளில் அநியாயமாக ஏமாந்து போகிறார் கள்.

முகஸ்துதியில் பல்வேறு படித்தரங்கள் இருக்கின்றன. பல பகிரங்கமானவை; வேறுசில மர்மமானவை. இப்படி இன்னும் எத்தனையோ! மனத்தின் அடித்தளத்தில் தோன்றும் மெல்லிய உணர்வுகளை எல்லாம் துப்புக் காண்பது அப்படி ஒன்றும் இலகுவான காரியமல்ல. அதற்கு ஆழ்ந்த சிந்தனையும் சலியாத பயிற்சியும் தேவை. இவை இல்லாமல் இந்தத் துறையில் எவரும் வெற்றியடைய முடியாது.

இந்தத் துறையில் முன்னேறி நின்றவர்கள் அத்தனை பேரும் பல்லாண்டு பயிற்சியில் பண்பட்டவர்கள். அவர்களில் ஒருவர் கூட இதிலுள்ள சிரமத்தை மறுக்க வில்லை. எனவே நீங்களும் இதை மறுக்க வேண்டாம். இதில் நீங்கள் வெற்றியடைய விரும்பினால் சிரமப்பட்டுத் தான் ஆக வேண்டும். சிரமத்திற்கு அஞ்சியவர்கள் வரலாற்றில் எந்தச் சாதனையையும் செய்ததில்லை.

10. உங்கள் வழி

நீங்கள் செய்யும் செயல்களை மட்டுமன்றி, நீங்கள் எண்ணும் எண்ணங்களையும் இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவனுடைய அறிவைவிட்டு எதுவும் தப்ப முடியாது. எனவே உங்கள் செயல்களில் இறைவனின் கண்ணோட்டம் கலந்திருக்கிறது என்னும் உண்மையை வைத்துத் திருப்தியடையுங்கள். மக்கள் பார்த்துப் பாராட்ட வேண்டும் என்று நினைத்தும் பார்க்காதீர்கள்.

இறைவனுக்கும் அவனுடைய பார்வைக்கும் அஞ்சுங்கள். அவனைத் தவிர்த்து வேறு யாருக்கும் எதற்கும் அஞ்சாதீர்கள். கடினமான வேலைகளைச் செய்யும் போது இறைவனின் எண்ணத்தை மனத்தில் பதித்துக் கொள்ளுங் கள். உங்கள் அடிமனத்தின் கூப்பாட்டுக்குச் செவி சாய்க்காதீர்கள்.

அப்போது அது கூறும் நாசூக்காக: ''ஆ! எத்துணைப் பெரிய வணக்கம்! இதை மக்கள் பார்த்தால் உனக்குச் சிரம் சாய்ப்பார்கள்!''

இந்த எண்ணத்தை ஒதுக்கித் தள்ளுங்கள். மனிதர் களில் எவரும் உங்களுக்குத் தலை சாய்க்க வேண்டிய தில்லை; தலை சாய்க்கவும் கூடாது. மக்களும் நீங்களும் இறைவனுக்குத் தலை சாய்க்கவேண்டியவர்கள். உங்கள் செயல் திறனுக்கு இறைவன் பரிசு கொடுக்கட்டும்; அவன் பாராட்டட்டும் . மற்றவர்களின் பரிசு உங்களுக்குத் தேவை யில்லை; அவர்கள் உங்களைப் பாராட்ட வேண்டியதில்லை.

செயலாற்றும்போது ஒருமித்த மனப்போக்கை ஏற்படுத் துங்கள். ஆரம்ப நிலையில் இது சிரமமாகப்பட்டால், அதற்கு முயற்சி செய்யுங்கள். செயலாற்றிக் கொண்டிருக்கும் போது முகஸ்துதி தோன்றுகிறது என்ற காரணத்தால் செயலையே

விட்டு விடாதீர்கள். தலை முடி உதிர்கிறது என்ற காரணத்தால் தலையை வெட்டி வீசியவர் எவருமில்லை.

உங்கள் நேர்மையை இயன்றவரை மக்களுக்குத் தெரியாமல் மறைத்து வையுங்கள். அவர்கள் உங்கள் நேர்மையைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. நேர்மை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய ஒன்று. உங்கள் நேர்மையில் பெருமை யடிப்பதற்கு அப்படி ஒன்றுமில்லை. நல்லெண்ணத்தோடு ஒரு காரியத்தைச் செய்து முடித்தபிறகு அதைப் பற்றி யாரிடமும் பேசாதீர்கள். சொந்தச் செயலுக்கு விளம்பரம் கொடுப்பது முஸ்லிம்களுக்கு அழகல்ல.

வேலையை ஆரம்பிக்கும் போது சிரமப்பட்டேனும் மனத்தை ஒருமுகப்படுத்துங்கள். உங்கள் மனம் ஒருமுகப் படாவிட்டால் சற்றுப் பொறுங்கள். உங்கள் உள்ளம் ஒருமுகப்பட்டுவிட்டது என்னும் தீர்மானம் ஏற்படும்வரை வேலையைச் சிறிது நேரத்திற்கு ஒத்திப் போடுங்கள். ஆனால் மன ஒருமை ஏற்படவில்லை என்ற காரணத்தை வைத்துக் கொண்டு வேலைகளைக் கட்டோடு விட்டு விடாதீர்கள்.

உங்கள் முயற்சியின்றி, உங்கள் செயல் மற்றவர்களால் கவனிக்கப்பட்டால் அது பற்றிக் கவலையில்லை. நீங்களாக வே சென்று அதற்கு முயற்சி செய்யாதீர்கள். உங்கள் பக்திக்கு உங்கள் மாணவன் கண்ணியம் கொடுத்து உங்களுக்குப் பணி புரிகிறானா? பெருந்தன்மையோடு ஏற்றுக் கொள்ளுங்கள். அவன் மனத்தைப் புண்படுத்தா தீர்கள். ஏனெனில் அவனும் உங்களைப் போன்ற ஒரு மனிதன் தான். ஒரு மனிதனின் மனத்தைப் புண்படுத்தும் உரிமை மற்றொரு மனிதனுக்குக் கிடையாது.

என்றாலும் நமது முன்னோர் இது போன்ற அன்புக் காணிக்கைகளைக் கூட மறுத்திருக்கிறார்கள். ஒரு பெரியார்

கிணற்றில் விழுந்துவிட்டாராம்; உதவி செய்வதற்காகச் சிலர் ஓடி வந்தார்கள் ; கிணற்றுக்குள் கயிற்றைத் தொங்க விட்டார்கள்.

அப்போது அந்தப் பெரியார் என்ன சொன்னார் தெரியுமா? 'போய்விடுங்கள். உங்கள் உதவி எனக்குத் தேவையில்லை. இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். திருக்குர்ஆனில் ஒரு வசனம் தெரிந்தவனும் இங்கு நிற்க வேண்டாம்!...'' என்று அலறினார். அப்போது அங்கு வந்திருந்தவர்கள் அனைவரும் முஸ்லிம்கள்; எல்லோரும் திருக்குர்ஆனைத் தெரிந்திருப்பார்கள். அதாவது, உதவிக்கு வந்தவர்கள் அனைவரையும் அவர் விரட்டினார்!

எனவே அறிஞர்கள், பேச்சாளர்கள் எழுத்தாளர்கள் முதலியோர் தாம் செய்யும் நற்காரிங்களுக்கு இறைவனிடம் அன்பை எதிர்பார்க்க வேண்டுமே தவிர மக்களிடம் எதையும் எதிர்பார்க்கக் கூடாது.

ஏழையையும் பணக்காரனையும் ஒரே விதமாக வர வேற்கப் பழகுங்கள். பணக்காரனுக்கு நடுங்குவதும் வறிய வனை நடுங்க வைப்பதும் சரியல்ல. உங்கள் நண்பர் களையும் விரோதிகளையும் ஒரே மாதிரியாக மதிக்கப் பழகுங்குள். பக்தியுள்ளவர்களுக்குப் பிரத்தியேக அன்பைக் கொடுங்கள். அவர்கள் இறைவனின் அன்புக்குரியவர்கள். உங்கள் அன்புக்கும் அவர்கள் உரியவர்களாக இருக்கட்டும்.

வறியர்வகளையும் செல்வர்களையும் நீங்கள் ஒரே வித மாகக் கவனித்து நடக்கும்போது உங்கள் மன நிலையில் அது மிகப் பெரும் முன்னேற்றத்தை ஏறுபடுத்தும், நம் முன்னோர் முகஸ்துதியை வென்ற அவர்கள் இப்படித்தான் நடந்தார்கள்.

நன்மைக்கு வழி வகுப்பவன் இறைவன் ஒருவனே!